பத்தாம் ஆண்டு

எழுத்து

இலக்கிய விமர்சன மாத ஏடு

ஆசிரியர் :
சி. சு. செல்லப்பா

இரண்டாவது உலக தமிழ் கருத்தரங்கு மகாநாடு பற்றி....

பிப்ரவரி-1968

50 பைசா

110

ஆசிரியர் : சி. சு. செல்லப்பா | பிப்ரவரி '68

எழுத்து—பிப்ரவரி 1968. ஏடு 110—பத்தாம் ஆண்டு.

இங்கிலீஷ் மாதம் தோறும் முதல் தேதியன்று வெளிவரும்.

ஆசிரிய காரியாலயம்: எழுத்து, 19-A, பிள்ளையார் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

சந்தா விகிதம் : தனிப்பிரதி 50 பைசா. ஒரு ஆண்டு ரூ. 6/- மூன்று ஆண்டுகள் ரூ. 15/ வெளிநாடு : ஆண்டுக்கு ரூ. 8/- மூன்று ஆண்டுகள் ரூ. 20/-

இலக்கிய, கலைக் கட்டுரைகளை வெளியிடும்: கட்டுரைகளுடன் ஸ்டாம்பு ஒட்டிய, தன் விலாசமிட்ட கவர்கள் அனுப்பப்பட வேண்டும். சுருக்கமாக எழுதப்பட்ட கடிதங்கள், கருத்துக்கள், எழுத்து அரங்கம் பகுதியில் வெளியிடப்படும்.

கடிதப் போக்குவரத்து, கட்டுரை அனுப்புதல்: மேலே கண்ட முகவரிக்கு ஆசிரியர், மானேஜர் என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

இரண்டாவது உலக தமிழ் கருத்தரங்கு—மகாநாடு

சி. சு. செல்லப்பா

1966ஆம் ஆண்டில் மலேசியாவில் துவக்கி வைக்கப்பட்டது முதல் உலக தமிழ் கருத்தரங்கு மகாநாடு. (I International Conference Seminar of Tamil Studies). இந்த ஆண்டு சென்னையில் ஜனவரி 3முதல் 10ம் தேதி வரை இந்த அமைப்பின் இரண்டாவது மகாநாடு ரொம்ப விமர்சையாக நடைபெற்றது. விமர்சையாக என்கிறபோது வெறுமனே சம்பிரதாயத்துக்காக சொல்ல வரவில்லை. தமிழ்நாட்டில் இதுவரை நடத்திராத ஒரு தமிழ் விழா. மலேசியாவில் முதல் கருத்தரங்கு மகாநாடு நடந்தபோது அது ஒரு தமிழ் ஆராய்ச்சி மகாநாடாவே பெரிதும் இருந்திருக்கிறது. ஆனால் சென்னையில் நடந்தது மகாநாட்டிலோ ஆராய்ச்சிக்கும் மீட்டாக கலை நிகழ்ச்சிகளும் விருந்தும் பிரதிநிதிகளையும் பார்வையாளர்களையும் திணற அடித்தன. வெளிநாடுகளிலிருந்து வந்திருக்கிறவர்களுக்கு தமிழின் பெருமையை தமிழரின் சிறப்பை எந்த அதிகபட்ச உயர்ந்த அளவுக்கு காட்டிவிட வேண்டுமோ, உணர்த்திவிட வேண்டுமோ அந்த அளவுக்கு காட்ட, உணர்த்த பெருமுயற்சி எடுத்துக்கொண்டு லட்சக்கணக்கில் பணம் வசூலித்தும் செலவழித்தும் ஆர்ப்பாட்டமாக நடைபெற்ற ஒருவிழா உண்மையிலே ஒரு சரித்திர நிகழ்ச்சிதான். பெருமைப்படக்கூடிய விஷயம் தான்.

இந்த பெருமை கொள்வது ஒரு புறம் இருக்க, தமிழ்மொழி, இலக்கியம் சம்பந்தமாக இந்த கருத்தரங்கு—மகாநாடு சாதித்தது என்ன, எதிர்பார்த்து அதில் கலந்து கொண்டவர்களுக்கும் பார்த்தவர்களுக்கும் கிடைத்த அநுபவம், பயன், லாபம் என்ன என்பதை நாம் பார்க்கவேண்டும். விருந்துகளும், கலைநிகழ்ச்சிகளும், தமிழ் பற்றிய பெருமைப் பேச்சுகளும், போக, மிஞ்சி நிற்கக்கூடியது என்ன, என்று கேட்டுக்கொள்ளத் தோன்றுகிறது. மொழி வளம் இலக்கிய வளம் பற்றி உலகம் எங்கும் இருந்து சுமார் நாற்பது நாடுகளிலிருந்து பிரதிநிதிகளாகவும் பார்வையாளர்களாகவும் வந்திருந்த சுமார் 400 பேர்களிடமிருந்து என்ன கருத்துக்கள் நமக்கு கிடைத்தன நம்மிடமிருந்து அவர்களுக்கு கிடைத்தது என்ன என்பதுதான் கவனிக்க வேண்டிய விஷயம்.

ஜனவரி 4ம் தேதி ஆரம்பித்து 10ம்தேதி வரை ஏழு நாட்கள் நடைபெற்ற கருத்தரங்கு கூட்டங்கள் 157 ஆகும். அதாவது 157 கட்டுரைகள் படித்து விவாதிக்கப்பட்டன. இதில் பொதுக்கருத்தரங்குகள், அதாவது எல்லாரும் சேர்ந்து கலந்து கொள்ளக்கூடியவை 12 ஆகும். மற்ற 145ம் குழுக்கருத்தரங்குகள். அதாவது தனித்தனியாக பிரிந்து அந்தந்த விஷயத்தில் ஈடுபாடும் அக்கறையும் கொண்டவர்கள் சிறு கூட்டமாக உட்கார்ந்து விவாதித்த கூட்டங்கள் ஆகும். பொதுக் கருத்தரங்குகள் முற்பகலில் நடந்தபோது வேறு குழுக்கூட்டங்கள் நடக்காது. எனவே எல்லோரும் கலந்து கொள்ள முடிந்தது. குழுக்கூட்டங்கள் பிற்பகலில் நடந்தபோது ஒரே சமயத்தில் ஐந்தாறு குழுக்கூட்டங்கள் நடந்ததால் ஒருவர், ஒன்று ஒருதுறை சம்பந்தப்பட்ட குழுக்கருத்தரங்கத்தில் மட்டும் முழுக்க கலந்து கொள்ள முடிந்தது, அல்லது அன்றைக்குறையாக ஒன்றுக்கு மேற்பட்டு இரண்டு மூன்று குழுக்கூட்டங்களில் பங்கு கொள்ள

முடிந்தது. யாருக்கும் பெரும்பாலான குழுக் கூட்டங்களில் கலந்து கொள்ள முடியாமல் போய்விட்டது. இது தவிர்க்க முடியாதது தான் என்றாலும் கொஞ்சம் சரியாக திட்டமிட்டிருந்தால் ஒருவர் அதிக பட்ச கூட்டங்களில் கலந்து கொண்டிருக்க முடியும். மாலை 5 மணிக்கு மேல் கலா நிகழ்ச்சி நேரமும் விருந்துகளுக்கு போய் வந்த நேரமும் (இரவு 12 மணி வரை ஆகும்) குறைக்கப்பட்டு கருத்தரங்குகளுக்கு அதிக நேரம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் இரண்டாவது இத்தனை (157) கருத்தரங்குகளுக்கு பதில் குறைவான தொகையிம் அதிக நேரம் கொடுத்து கருத்தரங்குகள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

காலை பொதுக்கருத்தரங்கு 9-30 மணிமுதல் 12-45 மணிவரை நடைபெறும். இரண்டு கட்டுரைகள் படிக்கப்பட்டு விவாதிக்கபடும். (9-30-11, 11-15-12-45) கட்டுரைகளை படிக்கவே 45 நிமிஷம் முதல் ஒரு மணி நேரம் வரை ஆகிவிடும். பிறகு அரைமணி நேரம் விவாதம் சுமார் 400 பிரதிநிதிகள் கொண்ட ஒரு கூட்டத்தில் படிக்கப்பட்ட ஒரு கட்டுரை விவாதத்துக்கு உரியதாக ஏற்பட்டு விட்டால் விவாதத்துக்கு அரைமணி நேரம் அவகாசம் கொசுவுக்கு சமானம். என்வே பொதுக்கருத்தரங்கில் நடைபெற்ற எந்த கூட்டத்திலும் விவாதம் போதுமான நேரம் இல்லாததால் அரைகுறையாகவே தான் முடிந்தது ஆனால், 'சங்க காலத்து தமிழ்—பிராமி கல்வெட்டுக்கள்' என்ற, ஐராவதம், மகாதேவன் கட்டுரை பற்றிய பொதுக்கருத்தரங்கு மற்றஎல்லா பொதுக் கருத்தரங்குகளை விட மிக முக்கியமானதாக இருந்ததால் மேற்கொண்டு அந்த கட்டுரை பற்றி விவாதிக்க ஒரு 'ஸ்பெஷல்' கருத்தரங்கு அமைந்தது. இதுமாதிரியே மற்ற கருத்தரங்குகளும் ஓரளவுக்காவது இருந்திருக்க வேணடும்.

பொதுக்கருத்தரங்குகளுக்காவது கொஞ்சமாவது விவாதிக்க நேரம் இருநதது. குழுக் கருத்தரங்குகள் விஷயம் ரொம்ப மோசம். குழுக்கருத்தரங்குகள் 2-30 மணிக்கு ஆரம்பமாகும் 5-10க்கு முடியும். இந்த இரண்டரை மணி அவகாசத்துக்குள் (காபி சாப்பிட 10 நிமிஷம் போக) 5 கட்டுரைகள் படித்து விவாதிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு கட்டுரைக்கும் படிக்க 20 நிமிஷம் விவாதிக்க, (அதாவது கேள்விகள் கேட்க, கேள்விகளுக்கு பதில் சொல்ல) பத்தே நிமிஷம்! நடக்கிற காரியமாகவே இல்லை. நான் கலந்து கொண்டவைகள் பெரும்பாலும் தற்கால இலக்கியம் சம்பந்தப்பட்ட கருத்தரங்குகள். அவைகளில் நடைபெற்ற விவாதங்களைக் கொண்டு சொல்கிறேன். சுவாரஸ்யம் இல்லாதவைகளாகவே அவை இருந்தன.

போதுமான அவகாசம் இல்லாத ஒரு குறைபுடன் இன்னும் ஒருபெரும் குறையும் இந்தகருத்தரங்குகள் சப்பென்று போனதுக்கு காரணம். ஒரு கருத்தரங்கில் ஒரு விஷயம் பற்றி ஒருவர் கட்டுரை வாசித்து மற்றவர்கள் அது சம்பந்தமாக விவாதிப்பது என்றால், அந்த கட்டுரையில் காணப்படும் கருத்துக்களை மனதில் வாங்கிக்கொள்ள அது பற்றிய தங்கள் கருத்துக்களை உருவாக்கிக்கொள்ள கொஞ்சம் அவகாசம் இருந்திருக்க வேண்டும். அந்த கட்டுரையின் அச்சடித்த பிரதிகள் கட்டுரை படிக்கப்படும்போது விவாதத்தில் கலந்து கொள்ள விரும்புபவர்களில் கையில் இருந்திருக்க வேண்டும். அத்தகைய ஏற்பாடு இல்லாமல் இருந்ததால், பதினைந்து இருபது நிமிஷத்துக்குள் கட்டுரையை படிக்க வேண்டிய அவசியத்தால் அவசரமாக படிக்கப்பட்டதும், கட்டுரை நீளமாக இருந்தால் சில பகுதிகள் நீக்கப்பட்டு படிக்கபட்டதும், கூட்டத்தினர் கவனமும் சதா போவோர் வருவோர், பேசிக்கொண்டிருப்போர் நடுவே சிதறினதும் எல்லாம் சேர்ந்து கட்டுரையில் சொல்லப்பட்டிருந்தது என்ன என்றுகூட தெரிய இடம் ஏற்படாத நிலையில் என்ன கேள்வி கேட்பது என்றுகூடத் தோன்றவில்லை. முற்பகலில் நடந்த பொதுக்கருத்தரங்கு கூட்டத்தில் படிக்கப்பட்ட கட்டுரைகள் பன்னிரண்டு மட்டும் அச்சடித்துக்கொடுக்கப்பட்டன. மற்ற 145 கட்டுரைகள் அச்சடிக்கப்படவில்லை, (நா. பார்த்தசாரதி, நா. வானமாமலை ஆகியோர் தங்கள் செலவில் அச்சடித்து விநியோகித்தார்கள்) லக்ஷக்கணக்காக பணத்தை செலவழித்த-வாரி இறைத்த என்று கூட சொல்லலாம்-கருத்தரங்கு மகாநாட்டுக்கு பொறுப்பாளர்களுக்கு இந்த சின்ன, ஆனல் முக்கியமான காரியத்தை செய்ய முடியாமலா போய்விட்டது? 'செய்வன திருந்தச் செய்'திருக்கவேண்டும்

இந்த சங்கடத்தை தவிர இன்னொரு சங்கடமும் இருந்தது. சென்ற மகாநாட்டில் தமிழில் கருத்தரங்கு நடைபெறவில்லை. இந்த மகாநாட்டில் இங்கிலீஷில் குழு கருத்தரங்குகள் நடக்கையில் தமிழிலும் தினமும் கருத்தரங்கு நடந்தது, தமிழ் கருத்தரங்கில் மட்டும் கலந்து கொள்ளும் ஆர்வம் உள்ளவர்களுக்கு பிரச்னை எதுவும் இல்லை. இலக்கியக் கட்டுரைகள் இரண்டு மொழியிலும் ஒரே சமயத்தில் விவாதிக்கப்பட்டபோது இரண்டிலும் கலந்து கொள்ள ஆசைப்பட்டவர்களுக்கு முடியாமல் இருந்தது. இதுவும் தவிர்க்க முடியாததுதான் என்றாலும் கொஞ்சம் பார்த்து திட்டமிட்டிருந்தால் ஓரளவு வசதி ஏற்பட்டிருக்கலாம்.

பொதுக் கருத்தரங்கு

பொதுக்கருத்தரங்கில் ஆறு நாட்களில் பன்னிரண்டு கட்டுரைகள் இங்கிலீஷிலும் இரண்டு தமிழிலும் புதை பொருளியல், சரித்திரம், நாகரீகம், கலையும் சிற்பமும், மொழி, மொழி பெயர்ப்பு, இலக்கியம், இவைபற்றி ஒவ்வொரு கருத்தரங்கு மொழியியல்பற்றி இரண்டு கருத்தரங்குகளும் நடைபெற்றன. தமிழில்

‘சங்க இலக்கியம் அறிமுகம்’ ‘காலந்தோறும், தமிழ்’ என்ற இரண்டு தலைப்புகளில் கருத்தரங்குகள். இந்த கட்டுரைகளில் சங்க காலத்தில் தமிழ்:- பிராமி எழுத்துக்கள்’ என்ற தலைப்பில் ஐராவதம் மகாதேவன் படித்த கட்டுரையே நல்ல ஆராய்ச்சி திறனை காட்டுவதாக அமைந்திருந்தது. அதன் மீது நடந்த இரண்டு விவாதங்களும் சுவாரஸ்யமாக இருந்தன கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன் தமிழ் மொழிக்கு எழுத்துக்கள் இருந்ததாக இது வரை கல்வெட்டுக்கள் மூலம் கிடைத்துள்ள ஆதாரங்களிலிருந்து அறியமுடியவில்லை என்றும், பிராமி எழுத்துக்களிலிருந்துதான் தமிழ் எழுத்துக்கள் பிறந்ததாகவும் அவர் ஆதார பூர்வமாக விளக்கியது, தமிழ் எழுத்து பிறப்பு சம்பந்தமாக ஒரு புதிய விவகாரத்தை ஆரம்பித்து வைத்திருக்கிறது. கருத்தரங்கிலேயே இந்த கருத்தை எதிர்த்து உணர்ச்சி பூர்வமாக கருத்துக்கள் வெளியிடப்பட்டன. உணர்ச்சி பூர்வமாக இல்லாமல் விஞ்ஞான பூர்வமான ஆராய்ச்சி வழியிலே மேற்கொண்டு விவாதம் நடப்பது தான் உசிதம்; பயனுள்ளதாக இருக்கும்.

அடுத்தபடி கோள பல்கலைக்கழக பேராசிரியர் டாக்டர் வி.ஐ. சுப்ரமண்யம் படித்த ‘தமிழ் இலக்கிய சரித்திரத்தில் சில எல்லைக்கல்கள்’ என்ற கட்டுரையும் சுவாரஸ்யமான விவாதத்துக்கு உள்ளாகியது. விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சி முறை வழியே பண்டைய இலக்கியங்களின் காலம் பற்றி முடிவுகள் செய்துள்ள வையாபுரிப்பிள்ளையைப் போல் அவர் சில கருத்துக்களை வெளியிட்டார் ‘ஒரு மொழி இலக்கியத்தின் சரித்திரம் என்றால் ஏதோ அந்த இலக்கியங்களின் காலத்தை நிர்ணயிப்பது என்பது மட்டும் இல்லை. அந்த இலக்கிய வகை, அதன் சந்தம், சமூகம், சிந்தனை இவைகளின் வளர்ச்சியை ஆராய்வதும் ஆகும். இந்த முயற்சியின் முடிவான நோக்கம் இலக்கியத்தை பயனுற மதிப்பிடுவதுதான் என்ற அவர் ‘ஒரு இலக்கிய நூலை எழுதப்பட்ட காலத்தைக்கொண்டு (முதன்மையான ஆதாரங்கள்) நேரடியாக கால நிர்ணயம் செய்ய சாத்யமாகலாம். அரசியல் சரித்திரம் மற்றும் சம்பந்தப்பட்ட முறைகளின் உதவியால் அறுதியிட முடியும்படியாக சுற்றி வளைத்த ஆதாரங்களையும் அது அடக்கி இருக்கலாம். சிலதில் இந்த தகவல் கூட கிடைக்காமல் இருக்கவும் கூடும். அந்த நிலையில் மொழி, சமூகம், கலாச்சார அம்சங்கள், சிந்தனை வளர்ச்சி, சந்த வளர்ச்சி ஆகிய இரண்டாம் பட்ச ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு முன்னேயும் பின்னேயும் நாம் அவைகளின் காலத்தை நிர்ணயிக்கலாம். அந்த இரண்டாம் பட்ச ஆதாரங்கள் தனித்தனியே அவை ரொம்ப வலுவானவை என்று சொல்ல முடியாவிட்டாலும் எல்லாம் கூட்டாகச் சேர்ந்து நாம் உருவாக்கிய யூகங்களை ஊர்ஜிதப்படுத்த அவை நமக்கு துப்புத் துலக்கி வழி காட்டும் என்றார். அவர் கட்டுரை இந்த வழியில் சில ஆராய்ச்சி அம்சங்களை அடக்கி இருந்தது. அவை சில துக்கு மறுப்புகள் கருத்தரங்கில் எழுப்பப்பட்டபோது, வையாபுரிப்பிள்ளையைப் போல பலர் சேர்ந்து பல ஆண்டுகள் ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டும் என்று சொன்னார். புதுமைப்பித்தன் கேலி செய்தமாதிரி ‘முதல் குரங்கு தமிழ் குரங்கு’ என்ற மனப்பான்மை கொள்ளாமல் வையாபுரிப் பிள்ளையின் முடிவுகள் தவிடுபொடி ஆகிவிட்டன என்று சும்மா சொல்லிக்கொண்டிருக்காமல் விஞ்ஞான, பூர்வமான ஆராய்ச்சியில் ஈடுபடவேண்டும் புலவர்கள்.

அடுத்தபடியாக காரசாரமான விவாதத்துக்கு உரியதாக இருந்தது க. சந்தானம் படித்த கட்டுரை ‘தமிழ் மொழியின் வருங்காலம்’ என்பது. சந்தானம் படித்தது இங்கிலீஷ் கட்டுரை. அந்த கட்டுரை அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது. இங்கிலீஷ் கட்டுரையில் ஒரு குறிப்பிட்ட கருத்தை சொல்லும் போது அதில் இல்லாத ஒரு அடை மொழிச்சொல் தமிழ் கட்டுரையில் காணப்பட்டதுதான் விவகாரத்துக்கு காரணம். இங்கிலீஷ் கட்டுரையில் ‘fanatics’ என்ற சொல்லை உபயோகப்படுத்தாத சந்தானம் அந்த வாக்கியத்தை தமிழில் மொழி பெயர்க்கும் போது ‘வெறியர்கள்’ என்ற சொல்லைஎப்படிபோட்டார்? இல்லாததைசேர்த்திருக்கவேண்டாம். தமிழ் மொழிபெயர்ப்பையும் கொடுத்திருக்க வேண்டாம். வெறியர் என்ற சொல்லை அவர் உபயோகப்படுத்தி இருக்கவேண்டாம்தான். நல்லதுக்கும் அந்த வார்த்தையை உபயோகிக்கலாம் என்றாலும் இப்போது ‘ஹிந்தி வெறியர்கள்’ என்ற சொல்லுக்கு உள்ள அர்த்தம் தானே இதுக்கும்? அதனால் அந்த வார்த்தையை மற்றவர் மீது உபயோகிக்கப்பவர்கள் தங்கள் மீது பிரயோகிக்கப்படக்கூடாது என்று விரும்புவது நியாயம்தான். புண்படுத்துவதாக கருதப்பட்டதும் சந்தானம் அதை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று ம. பொ. சிவஞானம் இரண்டு தடவை வற்புறுத்திச் சொல்லவும் சந்தானம் அந்த வார்த்தை தவறானது என்று கூறி வாபஸ் பெற்றுக்கொண்டு விட்டார். ஆனால் அதுவரை வாபஸ் பெறும்படி மட்டும் வலியுறுத்திய ம. பொ. சிவஞானம், சந்தானம் அதை செய்த பிறகு திருப்தியடையாமல், உடனே ஒருபடி மேலே போய் வாபஸ் வாங்கிக்கொண்டால் மட்டும் போதாது வருத்தம் தெரிவிக்கவேண்டும் என்று புதிதாக சேர்த்தார். ஏற்கனவேதான், வார்த்தை தவறானது என்று சொல்லிவிட்டதாக சந்தானம் சொல்லியும் ம. பொ. சிவஞானம் வருத்தம் தெரிவித்தேயாக வேண்டும் என்று பிடிவாதம் செய்து இல்லாவிட்டால் வெளி நடப்புச்செய்யப்போவதாக அடுத்த ஆயுதத்தையும் பிரயோகித்தார். சந்தானம் வருத்தம் தெரிவித்த பிறகு நிலைமை அமைதியாகிவிட்டது.

சந்தானம் சொல்லை வாபஸ் பெற்றுக்கொண்டுவிட்ட பிறகு ம. பொ. சிவஞானம்

மேற்கொண்டு இவ்வளவு தீவிரம் காட்டி இருக்க வேண்டியதில்லை. சரி, போகட்டும். பழைய சம்பவமாகிவிட்டது. ம. பொ. சிவஞானம் நடத்தும் 'செங்கோல்' பத்திரிகையில் 'பரங்கி மொழி பக்தர்கள்' என்ற சொல் விடாமல் கையாளப்பட்டிருக்கிறதை நான்பார்க்கிறேன். என்னைப்போன்ற இங்கிலீஷ் படித்து விட்டு தமிழ் இலக்கியத் துறையில் வெகு காலமாக ஈடுபட்டிருப்பவர்களை இந்த வார்த்தைகள் அவமதிக்கின்றன என்று எடுத்துக் கொண்டால் தவருக அவர் எண்ணமாட்டார் என்றே நான் நினைக்கிறேன். எனவே மொழி, இலக்கியம் போன்ற துறைகளில் யாருமே உணர்ச்சி வசப்பட்ட சொற்களை உபயோகப்படுத்தாமல் இருக்கவேண்டியதுதான் கடைப்பிடிக்கவேண்டியதாகும்.

இந்த ஒரு சொல் விவகாரத்தை விட்டு விட்டுப் பார்த்தால் சந்தானம் கட்டுரையில் அவர் தமிழ் மொழியில் தனிச்சிறப்பு பற்றியும் வளம் பற்றியும் தொல்காப்பியத்துக்கும் முன்பே தமிழ் சமுதாயத்தின் நாகரீகம் வளர்ந்து ,முதிர்ந்திருப்பது பற்றியும் எதிர் காலத்தில் தமிழ் உலக மொழிகளுக்குள் உயர்ந்த பதவி பெறும் என்பது பற்றியும் அப்படி ஆக நாம் என்ன என்னென்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் கூறி திட்டம் வகுத்துக் காட்டி இருப்பதை எல்லாம் அன்றைய கருத்தரங்கில் யாரும் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் கவனிக்காமல் போய்விட்டது அவருக்கு நஷ்டமில்லை. இதோடு இன்னொன்றையும் சொல்லத்தோன்றுகிறது. எனக்கு பக்கத்தில் உட்கார்ந்திருந்த பல பேராசிரியர்களும், புலவர்களும், தமிழபிமானிகளும் உணர்ச்சி வசப்பட்டு நடந்து கொண்டதையும் பேசியதையும் பார்க்கிறபோது நாம் எங்கிருக்கிருேம் என்று கேட்டுக்கொள்ளத் தோன்றியது. வெறியர் என்ற ஒரு சொல் தரும் வருத்தத்தைவிட பல மடங்கு வருத்தம் தரக்கூடியவை அவை என்பதை மட்டும் சொல்லி நிறுத்திக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக டாக்டர் மு. வரதராசன் படித்த 'காலந்தோறும் தமிழ்' என்ற கட்டுரை நான் ஆவலோடு கவனித்த கட்டுரை. இரண்டாயிரம் ஆண்டு இலக்கிய சரித்திரம் வாய்ந்த தமிழ் மொழியும் இலக்கியமும் சங்க காலத்திலிருந்து காலந்தோறும் மாறி வந்திருக்கும் போக்குகளை விவரமாக எடுத்துச்சொல்லி வந்தவர் பாரதிக்குப் பிறகு வளர்ந்திருக்கும் உரை நடை இலக்கியம் பற்றி ஓடுகிற ஓட்டததில் சொல்லிப்போய்விட்டார். பாரதிக்குப் பிறகு கிட்டத்தட்ட அரை நூற்ருண்டுக் காலம் ஆகி இருக்கிறது. சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை ஆகிய துறைகளில் ஐம்பத்தாண்டு காலத்தில் ஏற்றப்பட்டிருக்கும் வளம் பற்றி அவரது இருபத்தி நான்கு பக்க கட்டுரையில் பதிமூன்று வரிகள் அடங்கிய ஒரு பாராக்குள் அடக்கிவிட்டார். வேத நாயகம் பிள்ளை தமிழ் மொழி பெறுமாறு செய்த நாவல் இலக்கியம் கல்கி முதலானவர்கள் தொண்டிஞல் பெருமை பெற்றுள்ளது, சிறு கதை என்னும் மற்றொரு புதுவகை இலக்கியமும் புதுமைப்பித்தன் முதலானவர்களின் எழுத்துக்களால் ஆக்கம் பெற்றுள்ளது' என்ற தகவல்தான் இந்த பாராவில் அடங்கி இருப்பது.

தானே ஒரு நாவலாசிரியராக உள்ள மு. வரதராசனிடம், மற்ற சில தமிழ்மட்டும் படித்த அல்லது பழந்தமிழ் ஈடுபாடு' மட்டும் கொண்டுள்ள புலவர்களைப்போல இல்லாமல் தற்கால மனப்பாங்கும் புதுமை வரவேற்கும் இணக்க சுபாவமும் கொண்டவரிடம் நான் இதைவிட அதிகம் எதிர்பார்த்து ஏமாந்து போனதை சொல்லாமல் இருக்க முடியவில்லை. முதல் நாவல் தமிழ் மொழி பெறச் செய்தவர் வேத நாயகம் பிள்ளை என்ருல் தமிழ் நாவல் இன்று வளமாக அன்றைய 'கமலாம்பாள் சரித்திரம்' 'பத்மாவதி சரித்திரம்' ஆகியவைகாரணம். பின் வந்த புதுமைப்பித்தன் முதலானவர்களால் தமிழ் சிறுகதை ஆக்கம் பெற்றது என்ருல் அவருக்கு முன் தற்கால சிறுகதையை முதலில் பிறப்பித்த வ. வே. சு அய்யரும் அதுக்குப்பின் வளம் பெருக்கிய பி. எஸ். ராமையாவும் காரணம். கட்டுரை இலக்கியம் இன்று பெரும் அளவுக்கு வளர்ந்து இருக்கிறது என்ருல் பல படைப்புத் துறைகள் வளரக் காரணமாக இருந்த வ. ரா வின் கட்டுரைகளும் நடையும் அன்று புது ஆரம்பம் செய்தவை. பாரதிக்குப் பின் கவிதைக்கு பாரதிதாசன் என்ருல் உரை நடைக்கு வ. ரா. என்பது இலக்கிய சரித்திரமாக நம் கண்முன் காண்பது. பழமை இலக்கிய கணிப்பில் பல பெயர்கள் காணப்பட்டிருக்க இந்தமுன்னேடிகள் பெயர் காணப்பட்டிருக்க வேண்டாமா? உலகம் எங்கும் இருந்து வந்த நூற்றுக்கணக்கான தமிழ் அபிமானிகள் ஆராய்ச்சிகாரர்கள் முன் வைக்கப்படும் ஆராய்ச்சிக் கட்டுரைகளில்-பார்வை எப்படி இருந்தாலும் சரி-'ஸர்வே' என்கிறபோது தகவல் ரீதியாக முறையாக இருக்க வேண்டும்.

தமிழ் உரை நடை காலந்தோறும் மாறி வந்திருப்பதை மு. வரதராசன் குறிப்பிடுகையில் 'இன்று உரை நடை 'எளிய சொற்களும் சொற்ருெடர்களும் மிகுந்ததாய செயற்கைத் தன்மை இழநது இயறகையான வளர்ச்சி பெற்று வருகிறது. மக்களின் எண்ணங்கள் எந்த முறையில் அமைகின்றனவோ அதே முறையில் இன்றைய உரைநடை வாக்கியங்களின் சொற்கள் நேரே அமைகின்றன. எண்ணங்களின் அமைப்புக்கும் சொற்ருெடர்களின் அமைப்புக்கும் மாறுபாடு இல்லை. எண்ணங்களின் புறவடிவங்களாகவே சொற்ருெடர்கள் அமைகின்றன. இந்த இயல்பான போககு வளர்ந்துவிட்டது. ஆகவே உரை நடை இன்று புதுப்புது வளர்ச்சிகளுக்கு ஏற்ற கருவியாக பயன்பட்டு வருகிறது' என்று குறிப்பிட்டிருக்கிருர். இந்த வரிகளுக்காக நான் அவரை பாராட்டுகிறேன். வாசகர்களும் இந்த

வரிகளை ஒரு தடவைக்கு மேல் திரும்ப படிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். வேறு எந்த பேராசிரியரும் புலவரும் இந்த அளவு சொல்லி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. பின்னர் இது பற்றி அதிகம் பேசலாம். இந்த கருத்தை வெளியிட்ட மு. வரதராசன் உதாரணத்துக்கு திரு. வி. க. முதலான சான்றோர்களும் உரை நடையை பயன்படுத்தி இருக்கிறார்கள் என்கிற போது, நடை என்பதால் வ. ரா. வின் பெயர் அங்கே இருந்திருக்க வேண்டும் வ. ரா. நடை தமிழ் மொழி சரித்திரத்தில் ஒரு எல்லைக்கல். அவர் பெயர் இல்லாமல் உரை நடை சரித்திரம் முழுமையானதாக ஆகாது.

பொதுக்கருத்தரங்குகளில் எனக்கு அக்கறை இருந்தவைகள் இவைதான் முக்யமாக. மொழிபெயர்ப்பு சம்பந்தமாக மஹேஸ்வரி பாலகிருஷ்ணன் ஒரு கட்டுரை படித்தார். இன்று பத்திரிகைகள் மானாங்காணியாக வார்த்தைகளை உபயோகிப்பதாக குறைகூறினார். பத்திரிகைகள் தமிழ் வளர்த்திருப்பதை உணர இயலாத ஒருவருடைய பேச்சாக அது இருந்தது. பாவம், அவருக்கு தெரிந்தது அவ்வளவுதான் என்று நினைக்கத் தோன்றியது. அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட தமிழ்பத்திரிகை உலகம் எத்தனை தக்க புதுச்சொற்களை உபயோகத்துக்கு கொடுத்திருக்கிறது! அவர், ராஜினாமா மனுதார் ஜரூர் ரத்து இந்த வார்த்தைகளை தவறாக பத்திரிகைகள் உபயோகப்படுத்துகின்றன, எனவே இந்த சொற்களை எல்லாம் அகற்றிவிட்டு மொழியை தூய்மைப்படுத்த சர்வதேச ஆராய்ச்சிக்கழகம் வழிவகை காணவேண்டும் என்று சொன்னார் இலங்கைக் காரரான அவர் நம் தூய்மைவாதிகளையும் மிஞ்சிவிட்டார். இந்த மாதிரி மனப்பான்மை எவ்வளவு அசட்டுத்தனமானது நடக்காத காரியம் என்பதுக்கு கருத்தரங்கில் ஒரு சம்பவமே தக்க உதாரணம். க. சந்தானம் சொல்லை ஆட்சேபித்துப் பேசிய மா. பொ. சிவஞானம் அந்த வார்த்தையை வாபஸ் பெறவேண்டும் என்றுதான் சொன்னார். அதேபோல கூட்டத்தில் பலரும் (பேராசிரியர்கள், புலவர்கள் உள்பட) வாபஸ் என்று உரத்துக் கூவினார்கள். பத்திரிகைகள் கன்னாபின்னா என்று சொற்களை உபயோகிப்பதாக கூறும் அந்த கட்டுரையாளர் இதுக்கு என்ன சொல்லுகிறார்! கடியாரத்தின் முள்ளை பின் தள்ள வேண்டாம் என்று அந்த கட்டுரையாளருக்கு நாம் சொல்லலாம்.

இன்னொரு கட்டுரை மொழியியல் சம்பந்தமாக கமில் ஸ்வெலபில் என்ற செகோஸ்லேவியர் படித்த கட்டுரை. மொழியியல் சம்பந்தப்பட்ட குழுக் கூட்டம் எதுக்கும் நான் போகவில்லை. இந்த பொதுக்கருத்தரங்கு கூட்டத்தில் மட்டும் இருந்தேன். மொழியியல் ஆராய்ச்சி வளர்ந்திருக்கிறது. அது ஒரு தனித்துறை. அவசியம் என்றும் வைத்துக்கொள்வோம் ஆனால் யாருக்கு அவசியம்? உலகமொழிகளை ஒப்பிட்டுப்பார்த்து ஒற்றுமை, வேற்றுமை, தனித்தன்மை இவைகளை எல்லாம் ஆராய்பவர்களுக்கு அவசியம். ஆனால் என் போன்ற எழுத்தாளர்களுக்கு அவசியம் இல்லை. கல்கி பத்திரிகை 11-1-1968 ஏட்டில் சோமு (மீ. ப. சோமசுந்தரம்) இதைப் பற்றி வேடிக்கையாகவும், சுட்டிச் சொல்லியும் எழுதி இருக்கிறார். கமில் ஸ்வெலபில் ஆராய்ச்சியைக் கேட்டபோது ஏதோ பள்ளிக்கூட கணக்கு வகுப்புக்குள் நுழைந்து விட்டோமோ என்று அவருக்கு சந்தேகம் வந்து விட்டதாம். சில மொழியியல் குழுக்கருத்தரங்குபக்கம் நான் எட்டிப் பார்த்தபோது தமிழ் இலக்கணவகுப்பு நடப்பதாகவேபட்டது. மொழியியல் ஆராய்ச்சி நடக்கட்டும். ஆனால் அது இலக்கியத்தை இலக்கியரசனையை, விமர்சனத்தை அமுக்கிவிட்டு பூதாகாரமாக ஆகிவிடக்கூடாது. இலக்கியம், குறிப்பாக தற்கால இலக்கியம் பற்றிய அக்கறைக்கு உள்ளடக்கியே மொழியியல் ஒரு மொழிசரித்திரத்தில் இடம் பெறவேண்டும். வளர்ந்து விட்டுள்ள இலக்கியங்களுக்கு அது லாபமாக இருக்கலாம், வளரும் நம் இலக்கியத்துக்கு அதுவும் சர்வகலாசாலைகளில் தற்கால இலக்கியத்தின் காற்றே உட்புகமுடியாத நிலையில் எந்த அளவுக்கு லாபகரமானது என்பது எனக்கு சந்தேகமாகவே இருக்கிறது.

இனி குழுக்கருத்தரங்குகளை பார்ப்போம். மொத்தம் 118 இங்கிலிஷ் கருத்தரங்குகளில் மொழியியல் (39) சரித்திரம் (23) இலக்கியம் (21) கலை, புதைபொருளியல் (20) விஞ்ஞானம் அறிவியல் (10) ஆகியவை அதிக இடம் பெற்றன. நாம் இலக்கிய கருத்தரங்குகளை மட்டும் பார்ப்போம். ரிஷ்யசிருங்கர் கதை—ஒரு திராவிடக் கதை, பழங்கால தமிழ் கவிதையில் மரபு, சமஸ்கிருத கவிதை இலக்கணத்தில் காணப்படும். தொல்காப்பிய அகப்பொருள் பாதிப்பு. பண்டைய தமிழ், இந்தோ-ஆரிய கவிதையில் பருவக்காற்று, தமிழ் வீர ரசக்கவிதை-ஒரு ஒப்பு நோக்கு, ஆராய்ச்சி, குறுந்தொகை தொகுப்பில் பாலையில் உளவியல் குறியீடு, பெண்மை அழகு பற்றி தமிழ் லட்சணபாவனை, பதிற்றுப்பத்து. குறிஞ்சிப்பாட்டு பற்றி குறிப்பு, திருவாய் மொழியில் இயற்கை வர்ணனை, தேவாரமும் தாய்லாந்தில் உள்ள பல்லவ-சோழ கிரந்தமும் ஆகிய பதினோறு கட்டுரைகள் பழய இலக்கியம் பற்றியவை. பாரதியின் வசன நடை பற்றி ஆராய்ச்சி, தமிழ் நாவலாசிரியர் நடேச சாஸ்திரி, தமிழ் கிராமிய கவிதைகளில் சமூக உள்ளடக்கம், தமிழில் இரண்டு மரபு வழி கதை சொல் முறைகளின் அமைப்புவிதம். தற்கால தமிழ் இலக்கியத்துக்கு புதுமைப்பித்தன் பங்கு, இந்த நூற்றாண்டு மத்திய காலத்து சரித்திர நாவல்கள், ஒரு மலேசிய நாட்டு தமிழ் நாவல் பற்றிய ஆய்வு, பாரதியின் கவிதையில் இயற்கை, தற்கால இலக்கியத்தில் புதுப்போக்குகளை வெளியிடுவது பாரதி கவிதைகள், தமிழ் இலக்கியத்தில் முஸ்லீம் இலக்கிய வடிவங்கள் ஆகிய பத்தும் தற்கால இலக்கியம் பற்றிய கட்டுரைகள். (15-ம் பக்கம் பார்க்க)

மரபும் விமர்சனமும்

எம். பழனிசாமி

சென்ற இதழின் தொடர்ச்சி......

ஆனால் இன்றைய இலக்கிய கர்த்தாக்கள் மரபுபற்றி பேசும்பொழுது இவைகளையெல்லாம் நினைவு கூறுகிறார்களா என்பது தெரியவில்லை. அவர்கள் பண்டைய தமிழ் மரபுகளைப் பற்றியே பேசுவதாகத் தெரிகிறது. பண்டையத் தமிழ் மரபில் முக்கியமாக செய்யுளை, அகம்-புறம் என்று பிரித்துப் பார்த்தனர். இது ஒரு நிலத்தை ஐந்து வகையாகப் பிரித்து மக்கள் வாழ்க்கையைப் பாடினர் என்பது முன்பே கூறப்பட்டது. இது ஒரு மரபு. ஒரு பெரும் காவியம் என்றால் அதில் அறம், பொருள், இன்பம், வீடு என்ற செய்திகள் இடம் பெற்றிருக்க வேண்டும் என்பது ஒரு மரபு. மேலும், முதலில் மலையைப் பாடி, நதியைப் பாடி, நாட்டைப் பாடி, நகரத்தைப் பாடி. அந்நகரத்து தெய்வத்தைப் பாடி, பின் மக்களைப் பாடி, அதன் பின் தலைவன் தலைவியைப் பாடி கதையை ஆரம்பிக்க வேண்டும் என்பது மற்றொரு மரபு. இவ்வளவுமன்றி முதல்நூலாசிரியர், வழிநூலாசிரியர் ஆகியவரிடையேயும்கூட ஒரு மரபு இருப்பதாகத் தெரிகிறது "யாதானும் ஒரு நூல் விரித்தோதிய பொருளைத் தாமும் விரித்து ஓதுகின்றதனால் பயன் இன்றாமாதலால், முன்னூலாசிரியர் விரித்துக் கூறின பொருளைத் தொகுத்துக் கூறலும், தொகுத்துக் கூறின பொருளை விரித்துக் கூறலும் நூல் செய்வார் செய்யும் மரபு என்று உணர்க." இப்படி நம் பண்டைத் தமிழ் இலக்கியத்திலேயே பல மரபு முறைகள் தோன்றி வளர்ந்து வந்துள்ளன வென்றால், விமர்சகன் இன்றைய ஒரு நூலை இம் மரபுகளில் எந்த ஒன்றைக் கொண்டு எடைபோடுவது என்ற பிரச்னை எழுகிறது.

இதுமட்டுமல்லாமல் இன்னும் வேறுசில நிலைகளிலும் நாம் பண்டைய மரபுகள் பிரதிபலிக்கப் பட்டிருப்பதைப் பார்க்கிறோம், முதற் பொருளான நிலம் பண்டைய மரபை யொட்டி எவ்வாறு பாடப்பட்டுள்ளது என்பதை பண்டைய பாடல்களிலே காணலாம். இளவேனிற் காலம் ஆரம்பித்த உடன் நாட்டுக் காட்சி எப்படி மாறுகிறது என்பதை ஒரு 'பாடல் விளக்குகிறது.

"வீறுசால் ஞாலத்து வியல்அணி காணிய
யாறுகண் விழித்தபோல், கயம்நந்திக் [கவின்பெற
மணிபுரை வயங்கலுள் துப்புஎறிந் தவை [போலப்,
பிணிவிடும் முருக்கிதழ் அணிகயத்து [உதிர்ந்து உகத்,
துணிகய நிழல்நோக்கித் துதைபுடன் [வண்டார்ப்ப,
மணிபோல அரும்பூழ்த்து, மரமெல்லாம் [அலர்வேயக்,
காதலர்ப் புணர்ந்தவர் கலவுக்கை [நெகிழாது,
தாதுஅவிழ் வேனிலோ வந்தன்று ;......

வேனிற் காலத்தில் வற்றிக்கிடந்த நிலத்திலே, இளவேனிற்காலம் வந்தவுடன் பசுமை வீறு கொண்டு எழுந்தது. அதுகண்டு மகிழ விரும்புவது போல், நீரற்றுக்கிடந்த தன் தாக்கம் விடுத்து, கண் திறந்து, எங்கும் வாய்க்கால் வழி யாகப் பாய்ந்து, நீருடன் நிரம்பி ஆறு தோன்றியது. நீர்ப்பூக்கள் குளமெங்கும் நிறைந்து அழகுபடுத்தின. முதிர்ந்தஇதழ்கள் உதிர்ந்து நீருள் விழுந்தன; அக்காட்சி கண்ணாடிப்பாத்திரத்தினுள்ளே, மணியை இட்டது போன்றிருந்தது. கரையோரத்திலே இருந்த மரங்களில் புதுமலர்கள் பூத்துக் குலுங்கின; அவற்றின் நிழல் நீரினுள்ளும் தோன்றிற்று. அதனையும் மலர்கள் என்றே எண்ணி, வண்டுகள் நீரிலும் மொய்த்துக் கொண்டிருந்தன. மரங்கள் எல்லாம் மணி மணியான அரும்புகளைத் தோற்றுவித்திருந்தன., அக்காட்சி பூவினால் பந்தல் இட்டதுபோல் தோன்றியது..........]

இதுபோலவே பாலை நில்மும் மரபையொட்டி பாடப் பட்டிருப்பதைக் காணலாம்.

பல்வளம் பகர்பு ஊட்டும் பயன்நிலம் [பைதறச்
செல்கதிர் ஞாயிறு செயிர்சினம் [சொரிதலின்,
தணிவில்வெம் கோடைக்குத் தண்நயந்து [அணிகொள்ளும்
பிணிதெறல் உயக்கத்த பெருங்களிற்று [இனம் தாங்கும்
மணிதிகழ் விறன்மலை வெம்ப, மண்பகத்
துணிகயம் துக்ள்பட்ட தூங்கழல் வெஞ்சுரம்—'

[ஈரமில்லாமல் விளை நிலம் வறண்டுவிட்டது. தீமை செய்வனபோல சூரியனின் கிரணங்கள் சினந்து அனலைச் சொரிகின்றன. மலைச்சாரலுக்குச் சென்றாலாவது வெப்பம் தணிந்திருக்கும் என்றெண்ணி வெய்யிலுக்கு அஞ்சிவரும் யானைக் கூட்டத்தைத் தாங்கும் சிறந்த மலையும் கோடையால் வெம்பி விட்டது. பூமியின் உள்ளே இருக்கும் நீர்நிலைகளும் கூட வறண்டு புழுதியாகிவிட்டன, நெருப்பு தூங்குவது போலக் கொடிய வெம்மை பரந்து கிடக்கிறது அந்தப் பாலை நிலத்திலே)

இன்னும் பல வர்ணனைகளும் மரபையொட்டியே பாடப்பட்டுள்ளன என்பதையும் பார்க்கலாம். நடைமுறைக் காட்சிகளையே ஒப்புமைகாட்டி சிறக்கச் செய்திருப்பதை ஒரு பாடலிலே காணலாம் தலைவி உள்ளத்திலே ஏற்படுத்திய ஒப்புமையை கலித் தொகை ஒரு பாடலில் காட்டுகின்றது.

“மடி இலான் செல்வம்போல் மரன் நந்த,
[அச்செல்வம்
படி உண்பார் நுகர்ச்சிபோல் பல்சினை
[மிஞறு ஆர்ப்ப;
மாயவள் மேனிபோல் தளிர்ஈன, அம்
[மேனித்
தாய சுணங்குபோல் தளிர்மிசைத்
[தாது உக;
மலர்தாய பொழில்நண்ணி மணிநீர கயம்
[நிற்ப,
அலர்தாய துறைநண்ணி அபிர்வரித்து
[அறல்வார;”

[சோம்பலற்ற ஒருவனிடம் செல்வம் சேர்வது போல் மரங்கள் பூத்துக் குலுங்கின. சோம்பேறிகள் செல்வத்தை உண்டு திரிவதுண்டு. அதுபோல் கிளைகளைச் சுற்றி தேனுண்டு திரியும் வண்டுகள் ஆரவாரம்செய்தன, திருமகளின் நிறம் ‘போல’ மரங்கள் செந்தளிர்களை ஈன்றன. திருமகளின் மேனியில் காணும் சுணங்குபோல் அந்தத் தளிர்களின் மேல் தாதுகள் உதிர்ந்து காணப்பட்டன. சோலையில் உள்ள குளங்களில் கருமணி போல் நீர் காணப்பட்டது துறைகளிலே பூக்கள் உதிர்ந்து கிடந்தன. ஆற்றுநீர் அவற்றை வாரிச் செல்வதுபோல்ஓடியது.]

இதுபோன்றே இன்னும் பல வர்ணனைகளும் இடத்திற்கேற்ப பாடப்பட்டிருப்பதை ‘பட்டினப்பாலை’ போன்ற நூல்களிலே பரக்கக் காணலாம்.

இதுமட்டுமல்லாமல் இலக்கியப் பாத்திரங்களைப் படைப்பதிலே கூட மரபு இருந்தது என்பதை அறியலாம். அதன் பலனாகவே தலைவன் தலைவி பாங்கன், பாங்கி, செவிலி, நற்றாய், பாணன் போன்றவர்கள் சங்க இலக்கியங்களிலே பேசப்படுகின்றனர். ஆயினும் இந்தப் பாத்திரங்கள் யாவுமே நடைமுறை வாழ்க்கையில் உள்ளனவா என்றால் பெரும்பாலும் இல்லை என்றே கூற வேண்டும் முக்கியமாகப் பாங்கனும் பாங்கியும் இதை விளக்கும். மணமான பின்னும் தலைவியுடன் செவிலி சென்றது மர்பாக இருக்கும்போது இன்று இது நடைமுறையில் இல்லை. அப்படியிருக்கும் போது பண்டைய இலக்கியங்களிலே இந்தப் ‘பாத்திரப் படைப்பு’ இருந்ததன் நோக்கம் கூற வந்த செய்திக்கு நாடகப் பண்பைத் தருவதற்காகவும் நயம்பட உரைப்பதற்காகவும் என்பதாக இருக்கவேண்டும். தோழி, பாங்கி பாத்திரப் படைப்பில் எழுந்த ஒரு அருமையான பாடல்:

“சுடர்த்தொடீஇ! கேளாய் - தெருவில்
[நாம் ஆடும்
மணற்சிற்றில் காலிற்சிதையா, அடைச்சிய
கோதை பரிந்து, வரிப்பந்து கொண்
[டோடி,
நோதக்க செய்யும் சிறுபட்டி, மேலோர்
[நாள்,
அன்னையும் யானும் இருந்தேமா,
[‘இல்லீரே!
உண்ணுநீர் வேட்டேன் என வந்தாற்கு,
[அன்னை,
‘அடர்பொன் சிரகத்தால் வாக்கிச், சுடர்
[இழாய்!
உண்ணுநீர் ஊட்டி வா’ என்றாள்; என,
[யானும்,
தன்னை அறியாது சென்றேன்; மற்று
[என்னை
வளைமுன்கை பற்றி நலியத், தெருமந்
[திட்டு
‘அன்னாய்! இவன் ஒருவன் செய்ததுகாண்!
[என்றேனா
அன்னை அலறிப் படர்தரத், தன்னை யான்,
‘உண்ணுநீர் விக்கினான்’ என்றேனா,
[அன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவ, மற்று
[என்னைக்
கடைக்கணால் கொல்வான்போல் நோக்கி,
நகைக் கூட்டம்
செய்தான், அக்கள்வன் மகன்.

[ஒளி பொருந்திய வளையணிந்தவளே, கேளடீ இந்தக் கதையை! நாம் தெருவில் கட்டி விளையாடும் சிறு வீட்டைத் தன் காலால் அழித்தானே ஒருவன், நம் தலையில் இருந்த பூவைப் பிய்த்தெறிந்து நம்மை அழவிட்டானே ஒருவன், நாம் விளையாடின பந்தினைப் பறித்துக் கொண்டு ஓடி நம்மைக் கதறவிட்டானே ஒருவன்! அந்தக் கட்டுக் கடங்காதவன்

ஒருநாள் என்ன செய்தான் தெரியுமா? ஒரு நாள் நான் என் அன்னையுடன் வீட்டில் இருந்தேன். வாசலில் இருந்து கொண்டே அவன் 'உண்ணும் நீர் வேண்டும்' என்று கேட்டான். தாய் என்னை அழைத்து, 'சுடர் இழாய்! பொன் கலத்திலே நீர் கொண்டு சென்று அவனுக்குக் கொடுத்துவா' என்ருள். வந்தவன் அவன் என்றறியாமல் நான் நீர்கொண்டு சென்றேன். போனேனு? அந்தக் குறும்புக்காரன் வளையணிந்த என் முன்கையைப் பற்றி இழுத்தான். நான் நடுங்கிவிட்டேன். 'அம்மா! இவன் செய்வதைப் பார்!' என்று கூவினேன். அன்னை அலறித்துடித்து வந்தாள். அவனும் நடுங்கி விட்டான். அதுகாண பாவமாயிருந்தது. எனவே. நடந்ததை மறைத்து 'நீர் குடிக்கும் போது விக்கினுன்' என்று மாற்றிக் கூறினேன். உண்மை உணராத தாயும் அவனைத் தடவிக் கொடுத்தாள் பரிவுடன். அப்பொழுது அந்தக் கள்வன் மகன் கொல்வதுபோல் என்னைப் பார்த்து நகைத்தானடீ!]

நாடகப் பாத்திரங்களைக் கற்பித்துப் பாடியதனுல் இது போன்ற சிறந்த பாடல்களைக் காணகிருேம். புறநாநூற்றில் காணப்படும். பண்ணை வழிப்படுத்துமுகத்தான் எழுந்த பல பாடல்களும் இந்த வகையைச் சேர்ந்தனவாக இருப்பதைக் கண்டு மகிழலாம்.

இன்னும் கடவுள்களைப் பற்றி வருமிடத்து தகுந்த அடைமொழிகள் போடுவதும் ஒரு மரபாகவ் அக்காலத்தில் இருந்து வந்துள்ளதை சங்கப் பாடல்களில் அறியலாம். சிவபெருமான் திருமால், முருகக் கடவுள் முதலியவர்களைப் பற்றிய செயதிகள் வருமிடத்து அவ்வக் கடவுளின அன்பர்கள் வழங்கும் மரபு பிழையாமல் எழுதியுள்ளனர். சிவபெருமானுக்குரிய பெயர்களை, பொருள்களை திருவென்னும் அடை கொடுத்தும், பலதேவரை நம்பி மூத்தபிரானென்றும், முருகனைப் பிள்ளையாரென்றும் வழங்கி வந்தது ஒரு மரபாகும்.

உவமை கூறுவதிலேயும் ஒருவித மரபு இருந்துவந்துள்ளதைப் பார்க்கிருேம். மூங்கிலைத் தோலுக்கும், தாமரை, நிலவு முதலியவற்றை முகத்திற்கும், குவளையைக் கண்ணுக்கும், கொவ்வையை அதரத்திற்கும் ஆக பண்டு தொட்டு கையாளப்பட்டு வந்துள்ளமையையும் பார்க்கவேண்டும். இதிலிருந்து பழைய இலக்கியங்கள் அதிகம் விலகிச் செல்லாமல் ஒட்டியே வளர்ந்து வந்துள்ளமையையும் எண்ணிப் பார்க்கவேண்டும், பெண்ணின் கையைப் பாட வந்த புலவர்கள் கூடவே அடைமொழி சேர்த்துப் பாடியிருப்பதையும் காணவேண்டும் "அரிமயிர்த் திரண்முன்கை" என்றும், "அரி முன்கை" என்றும் வரும் வரிகள் இதை விளக்கும். பாடினி இழைபெறுவதாகவும், பாணன் பொற்ருமரை பெறுவதாகவும் பாடுவது மரபாக இருந்து வந்துள்ளது.

"......இழைபெற்ற பாடினிக்குக்
குரல் புணர்சீர்க் கொளைவல்பாண்
மகனும்மே
எனவாங்
கொள்ளழல் புரிந்த தாமரை
வெள்ளி நாராற் பூப்பெற் றிசினே"
"அழல்புரிந்த வடர்தாமரை
ஐதடர்ந்த நூற்பெய்து
புனைவினைப் பொலிந்த பொலநறுந்
[தெரியல்.

பாறுமயி ரிருந்தலை பொலியச் சூடிப்
பாண்முற் றுகநின் னுண்மகி ழிருக்கை..."
"தலைவன் ருமரை மலைய விறலியர்
சீர்கெழு சிறப்பின் விளங்கிழை யணிய..."
"எரியகைந் தன்ன வேடி ருமரை
சுரியிரும் பித்தை பொலியச் சூட்டி
நூலின் வலவா நுணங்கரின் மாலை
வாலொளி முத்தமொடு பாடினி யணிய..."

என்ற வரிகளைக் காணலாம் இன்னும், மாந்தரை வாழ்த்தும் போது பெண்பாலரை ஆண்பாலாரோடு சேர்த்தே வாழ்த்துதல் மரபாக இருந்துவந்துள்ளது. "செயிர்தீர் கற்பிற் சேயிழை கணவ," "ஒடுங்கீ ரோதிக் கொடுங்குழை கணவ," "மங்கையர் கணவ," மலர் போன் மழைக்கண் மங்கையர் கணவன்" என்ற வரிகளில் இதைக் காணலாம் 'மக்களுட் பெண்பாலைப் பாடுதல் சிறப்பன்மையின் இவ்வாறு சிறுபான்மை ஆண்மக்களோடுபடுத்துப்' பாடுவது வழக்கமாக இருந்தது என்பதையறிய வேண்டும்.

இப்படியே இன்னும் பல மரபுப் படிகள் அல்லது நிலைகள் பண்டை நூல்களைப் பார்க்கின் கிடைக்கும் வடமொழி தென்மொழி நூல் புலவர்கள் பல செய்திகளை முன்னவர் கூறிய மரபுக்கேற்பத் தாமும் கூறுதல் ஒரு வழக்கமாகிப் பின்பு மரபாக மாறி நின்றது. புகழை வெண்ணிற மூடையதாகக் கூறுவது ஒரு மரபு. "இவள் பெரும் புகழ் நெடுநிலா வெங்கணு நிறைந்திடுவது". மகளிர் உதைக்க அசோகம் மலரும் என்பதும், மற்றும் இதுபோன்ற செய்திகளும் வழக்கில் தோன்றியவையே. இசைக்கு கல் உருகுவதாகக் கூறுவதும் மரபு பற்றியே.

"வாழொப்பிலாதவன் சேயொப்பி லாத
[மழவதிரை
ஆழிக் கடல்விட்டு நீபாடுங் காலத்தரி
[செலுங்கால்,
நீழற் கவுத்துவ நீத்துச் செல் வானந்த
[நீண்மணிதான்
காழொப்பினுநின் னிசைகேட்குங் காற்
[கரைந்தேகுமென்றே."

இதுபோன்றே புழக்கவழக்கங்களில், நடைமுறையில் வேருன்றி மரபாக எழுந்தவைகளைக் கூறின் மிக விரியும். பொதுவாக. இதுவரைக் கூறியவற்றிலிருந்து மரபு என்று நாம் கூறுவது. முன்பே கூறியதுபோல் அன்றாட நடப்புச் செய்திகளும் அந்தந்தக் காலத்திய பழக்க வழக்கங்களும் என்பது புலனாகியிருக்கும். முக்கியமாக கவிதைப்பக்கம் நுழைந்தால் இந்த மரபு, சூத்திரங்கள் என்ற பெயரிலே புகுத்தப்பட்டிருப்பதைக் காண்கிறோம். 'அடி' கணக்கைக்கொண்டு செய்யுட்களும், இன்னின்ன செய்யுட்கள் இன்னின்ன அடி, தளைகளில் அமைந்திருக்க வேண்டும் என்ற மரபும், பரணியில் இன்னின்ன செய்திகள் தரப்படவேண்டும், கலம்பகம் இப்படித்தான் பாடவேண்டும் என்ற விதிமுறைகள்கூட மரபு பற்றி வந்தவைகளாகவே காணப்படுகின்றன.

இது மட்டுமின்றி நம் அன்றாட வாழ்க்கையில் பலசெய்திகளை உண்மையோ, பொய்யோ மரபாக ஏற்றுக் கொண்டுள்ளோம் என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இன்னும் சொல்லப்போனால் நம்மையறியாமலேயே வாழ்வின் ஒவ்வொரு விநாடியும் பெரும்பாலும் மரபு வழியிலே செல்லுகின்றது. உதாரணமாக நாம் ஒரு சினிமா பார்ப்பதாக வைத்துக்கொள்ளலாம். அப்படத்தில் குழந்தை குமரனாகி, குமரன் கணவனாகி, தந்தையாகும் வரையும் அவனது வாழ்க்கைச் சம்பவங்கள் சித்தரிக்கப்படலாம். இது முழுதும் சுமார் மூன்று மணி கால நேரத்தில் முடிந்து விடுகின்றன. உண்மை வாழ்வில் இந்த மூன்று மணி நேரம் ஒரு பெரிய நேரமாகக் கருதுகிறோமா? ஆயினும் படத்தில் அவனது வாழ்க்கை முழுவதையுமல்லவா பார்த்து மகிழ்கிறோம். யாராவது எப்படி இத்தனைக் குறுகிய காலத்தில் இவ்வளவு சம்பவங்களும் நிகழ முடியும் என்று கேட்டுக்கொள்ளுகிறோமா? நடக்க இயலாது என்று அவற்றை தள்ளியா விடுகின்றோம்? அவற்றை அப்படியே நடந்ததாக எடுத்துக்கொள்வதில்லையா? இதையும் மரபுவழி வந்ததாகக் கூறலாமல்லவா? இதைப் போலவே திரையில் தீட்டப்பட்டிருக்கும் காட்சியை அக்காட்சிக்கு ஏற்றபடி அந்தச் சூழ்நிலையாகவே நாம் ஏற்றுக்கொள்வதில்லையா? இதுவும் மரபு பற்றியதாக இருக்கிறது என்று கூறலாமல்லவா?

எது எவ்வாறாயினும் இப்படியெல்லாம் வெறும் தோற்றத்தைக் கொண்டு மட்டுமே நாமாகக் கற்பித்துக் கொள்வதற்கு நம்மிடம் "Williug Suspen ion of disbelief" இருப்பதனால்தான் என்று கூறவேண்டும். பல்வேறு கலைகளிலும் பொதுவாக உள்ள மரபுகளில் 'ஒத்துக்கொள்வதும்' (acceptance) ஒன்றாகும். இதன் காரணமாகவே பொய்யையும் மெய்யாகக் கருத வேண்டியுள்ளது. அது இல்லாத விடத்து அந்தக் கலைப்பகுதி சுவையற்ற சக்கையாகத்தான் தெரியும்.

இதுவரை கூறப்பட்ட செய்திகளை எல்லாம் பொதுவாகப் பார்க்கும்போது முன்பே கூறப்பட்டதுபோல் மக்களின் அன்றாட நிகழ்ச்சிகளின் அடிப்படையிலிருந்தே மரபு பிறந்திருப்பதாக அறிகிறோம். நம்முடைய பண்டைய இலக்கிய மரபு என்று கூறும் பொழுது இந்நிகழ்ச்சிகள் யாவும் சங்ககாலத்தில் வாழ்க்கையோடு ஒட்டி வந்துள்ளனவாகப் படுகின்றன. இந்த மரபு தவறாதிருக்கும் பொருட்டே தொல்காப்பியச் சூத்திரங்கள் (மரபியல்) கட்டு திட்டங்கள் வகுத்ததாகக் கொள்ளவேண்டும். இதை அடியொட்டியே சிலம்பும் மேகலையும் தோன்றின. அதிலும் பாத்திர மரபு இன்னும் சிறப்புடையதாக அமைந்திருப்பது நோக்கத்தக்கது

தமிழிலக்கியத்தை முறையாக அறிந்தவர்கள், தொல்காப்பிய விதிகளையும் மீறி, சில இலக்கியங்கள் தோன்றியுள்ளதை அறிவர். உதாரணமாக சிந்தாமணியைப் பார்க்கலாம். அதன்பின் கம்பராமாயணம், பெரிய புராணம் முதலியவற்றிலும் மரபு பிறழ்ந்துள்ளமை அறியப்படவேண்டும். அதன் பின் தோன்றிய சிற்றிலக்கியங்கள் பல மரபு பிறழ்ந்து வடமொழிச் சார்புடன் தோன்றியுள்ளமையையும் கூர்ந்து கவனிக்க வேண்டும் பல புராணங்கள்—முக்கியமாக ஸ்தல புராணங்கள்—மரபின்றி இருப்பதையும் கவனிக்க வேண்டும்.

இலக்கியப் படைப்பை சீர்தூக்கப் புகும் விமர்சகன் இம்மரபு முறைகளைப் பற்றி அறிந்து வைத்திருப்பது நல்லதே. ஆயினும் தான் ஆராயும் எல்லா நூல்களுக்கும் இம்மரபுகளைப் புகுத்திப் பார்த்து சீர்தூக்குவது என்பது இயலாததொன்று என்பதையும் அவன் அறிந்திருக்கவேண்டும். துலாக்கோல் தேவைதான். ஆயினும் தங்கத்திற்கும் விறகிற்கும் ஒரே துலாக்கோல் பயன்படாது என்பதை அவன் நினைவில் கொள்ள வேண்டும்.

மரபு, காலத்து நடப்புக்களிலிருந்து பிழிந்தெடுக்கப்பட்டசாறு என்றால், ஆராயும் படைப்பின் காலத்தைக் கொண்டே மரபைப் புகுத்தி எடைபோட வேண்டும். பண்டைய இலக்கியங்களிலே காதலர்கள் ரயிலேறிச் சென்றார்கள் என்பதையோ, இன்றைய இலக்கியங்களிலே தலைவி அன்னத்தைத் தூது விடுத்தாள் என்பதையோ அல்லது தலைவன் மடலேறினான் என்பதையோ தேடிப் பார்ப்பது வீணாகும். தொடக்கத்தில் பார்த்த கருப்பொருள்களில் பலவற்றை இன்றைய வாழ்க்கைச் சூழ்நிலையிலே வெற்றிகரமாகக் கையாள இயலாது என்பதையும் விமர்சகன் புரிந்து கொள்ள வேண்டும்.

மேலும், இலக்கியப் படைப்பு அன்றைய வாழ்க்கை நடைமுறையின் ஊற்றாகப் பிறப்பது என்பதை யாவரும் ஒத்துக்கொள்வர். இந்த

வாழ்க்கை முறைகள் பண்டைய காலத்திலிருந்து இக்காலம்வரை காலத்தின் கோலத்தில், நாகரிக வளர்ச்சியில் (?), கொள்கை மாறுதலில்—இன்னும் பிற காரணங்களினால் மாறி வந்திருப்பதைக் காணலாம். அப்படியானால் நடைமுறையையொட்டித் தோன்றிய மரபும் காலத்திற்கேற்ப மாறித்தான் வந்திருக்க வேண்டும். வழக்கொழிந்த நடைமுறைகளோடு அதைச்சார்ந்த மரபும் வழக்கொழிய வேண்டும் என்று எண்ணுவது பொருந்துவதே; நல்லவை நிற்க தீயவையும் வேண்டப்படாதவையும் மறைவதும் நல்லதே. வழக்கொழிய வேண்டிய மரபைப் பிடித்துக்கொண்டு இன்றைய சூழ்நிலையிலே ஆக்கப்பணிக்கு நுழையப் பார்ப்பது வேர்கிள்ளி நீர்வார்ப்பதாகத்தான் இருக்கும்; பட்டுப்போன மரம் விறகாக வேண்டியதே.

இலக்கியப் படைப்பை ஆராயும் விமர்சகன் இன்னொன்றையும் கருத்தில் கொள்ளவேண்டும். இன்றைய தமிழ் இலக்கியங்கள் பெரும்பாலும் பிறமொழி இலக்கியங்களின் தூண்டுதல் காரணமாக தோன்றியவை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இதன் காரணமாகவே மொழிச் சார்பும் ஏற்பட்டு பண்டைய மரபு பெரிதும் பிறழலாயிற்று. இங்கு பண்டையத் தமிழிலக்கிய மரபைப் புகுத்திப் பார்ப்பது சிறப்புடையதாகாது. மூல இலக்கிய மொழிக்கு ஏற்ப மரபும் மாறுபட்டிருக்கும் மூல இலக்கிய மொழிக்கென்றுள்ள மரபை எடுத்துக்கொள்வதா அல்லது கிளை (வழி) இலக்கிய மொழிக்கென்றுள்ள மரபை எடுத்துக்கொள்வதா என்ற பிரச்னை எழும் ஆயினும் பல இடங்களில் இந்த இரண்டுமே சரிப்பட்டு வராமல் போவதைக் காணலாம்.

இன்னுமொரு விஷயத்தை விமர்சகன் கவனிக்கவேண்டும். அகத்திணை மரபிற்கேற்ப சங்கப் பாடல்களின் அகத்திணைப் பாடல்கள் பாடப்பட்டுள்ளன. அவை உயிருடனும், உணர்ச்சியுடனும், சுவையுடனும் இருக்கின்றன. அதே நேரத்தில், அதே அகத்திணை மரபுகளை வைத்துக்கொண்டு பிற்காலத்தில் எழுந்த கோவை போன்ற நூல்களில், சங்கப் பாடல்களில் இருந்த உணர்ச்சி நயம் காணப்படுவதில்லை. இதையும் விமர்சகன் எண்ணிப் பார்க்கவேண்டும்; ஒருவகைப் பாடலுக்கு ஏற்பட்ட மரபு பிறிதொருவகைப் பாடல்களுக்கு ஏற்புடைத்தன்று என்பதை உணரவேண்டும். பல்வேறு உணர்ச்சிகளை பண்டை அகத்திணைப் பாடல்கள் தம் மரபிற்கேற்ப வெளிப்படுத்தின. ஆனால், பிற்காலப் பாடல்கள் எண்ணிக்கையில் பரந்தனவேயன்றி உணர்ச்சிப் பெருக்கிலல்ல.

இன்றைய இலக்கிய உலகிலே முக்கியமாகக் கவிதை குறித்து 'மரபு' அதிகமாக அடிபடுகின்றது. அது குறித்து வாதப்பிரதிவாதங்களும் அவ்வப்பொழுது நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. அது எவ்வாறாயினும் விமர்சகன் ஒன்றை அனுமதித்தே தீரவேண்டும். 'பழையன கழிதலும் புதியன புகுதலும் புதியதன்று-இவ்வுலகத்தியற்கை என்றார் ஆன்றோர் ஒருவர். வழக்கொழிந்தனவற்றை விட்டுவிடப் பழகிக்கொள்ளவேண்டும். அதையே எவற்றிக்கும் 'சிக்'கெனபிடித்துக் கொண்டிருப்பது எல்லா வியாதியஸ்தர்களுக்கும் ஒரேவிதமான மிக்சர் தருவதற்கொப்பாகும். புதிய இலக்கியமுறைமைக்கும் புது இலக்கணம் தேவைப்படுவது போல புதிய இலக்கிய முறைமைக்கும் புது மரபு தேவையென்பதை உணரவேண்டும். பழைய மரபிலிருந்து உயிர்த்தெழுவதனாலும் சரி, அல்லது புதியதாகவே தோன்றுவதானாலும் சரி, புதிய மரபு காலத்து நடப்பிற்கேற்ப தேவை என்பதை விமர்சகன் மறந்துவிடக்கூடாது.

வாழ்க்கையிலிருந்து பிறப்பதே இலக்கியம். மரபும் வாழ்க்கையிலிருந்து பிறந்ததாகவே முன்பு கூறியவற்றிலிருந்து தெரியும். எனவே இலக்கியமும் மரபும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டவைகளே. எனினும் வாழ்க்கைக்குத் தக்கபடி இலக்கியப் படைப்பிலும் மரபிலும் மாறுதல்கள் தோன்றுவது தவிர்க்க முடியாதது; மரபும் மாறிமாறி வரத்தான் செய்யும். எல்லாக்கால இலக்கியப் படைப்புகளுக்கும் ஒரு காலத்திய மரபையே பார்ப்பது நீரையும் நிலத்தையும் ஒரே அளவு தோல் கொண்டு அளப்பதற்கொப்பாகும். இதை விமர்சகன் மறக்கக்கூடாது.

மரபைப் பற்றி எண்ணிப் பார்க்கும் விமர்சகன் மற்றொன்றையும் எண்ணிப் பார்க்கவேண்டும். இன்றைய வாழ்க்கைச் சூழ்நிலைகளில் பழைய மரபையொட்டி இலக்கியப் படைப்புகளைப் பலர் செய்யலாம். அது வெற்றியடைந்ததா அல்லது தோல்வியடைந்ததா என்பதையும் விமர்சகன் ஆராயவேண்டியவனாகிறான். மரபையொட்டிய இன்றைய படைப்பு சுவைகூடியதாயுள்ளதா அல்லவா என்பதையும் அவன் பார்க்கவேண்டும்.

கடலில் சங்கமமாகும் பல நதிகள்போல் இன்றைய இலக்கியக் கடலிலே பல துறை நூல்களையும்கூட இலக்கியத்தின் பகுதியாக இன்றைக்கு மதிப்பிடும்போது அதில் பண்டைய இலக்கிய மரபை எப்படிப் பார்க்க இயலும் என்பதையும் விமர்சகன் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

ஆயினும் மரபு என்ற ஒன்று பண்டைய காலத்திலிருந்து இக்காலம் வரை வந்துள்ளது என்பதைப் பார்க்கும்போது அந்த மரபில் அடங்கியவை பண்பாட்டில் ஊறித்திளைத்த

(14-ம் பக்கம் பார்க்க)

கனவும் நனவும்

ந. சிதம்பரசுப்ரமண்யன்

[சென்ற ஏட்டின் தொடர்ச்சி]

இது வெறும் புராணம் ஆனால் வாழ்க்கையிலும் பல சம்பவங்கள் நடக்கின்றன. எங்கேயோ ஏதோ நடப்பதாகக் கனவு காண்கிறார் ஒருவர். அது பிறகு உண்மை என்று புலனாகிறது. கனவு ஒன்றை ஒருவர் காண்கிறார். பிறகு அதுவே அவருக்கு அநுபவமாக நிகழ்கிறது. இது எப்படி என்பதைப் பற்றி உளவியல் நிபுணர்கள் ஆராய்ந்திருக்கிறார்கள் பின்னால் நடக்கப்போவதை முன்னால் நாம் அறிந்தால் பிற்காலத்தில் நடக்கப் போவது முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டதாக ஆகிவிடுகிறது. அப்பொழுது சுயேச்சையான சங்கல்பத்திற்கு (free will) இடமில்லையா என்ற கேள்வி பிறக்கிறது. இது பற்றி :டன் (Dunne) என்பவர் இறந்த காலம், நிகழ் காலம், வருங்காலம் இவைகளில் நிகழும் சம்பவங்கள். ஏதோ ஒரு விதத்தில் அந்த நிமிஷத்திலேயே இருக்கின்றன என்கிறார். மூன்று காலங்களும் சங்கிலித்தொடர் போல ஒன்றை ஒன்று பிணைந்து நிற்கின்றன.

இப்படிப்பட்ட அநுபவங்களைப்பற்றி மனோத் தத்துவ சோதனை (Psychological research) செய்யும் சங்கம் அற்புதமான பரீட்சைகள் செய்து வருகிறது. தத்ரூபமாக நடந்த அல்லது நிரூபிக்கப்பட்ட விஷயங்களைத் தொகுத்து வெளியிடுகிறது. அவர்கள் வெளியிட்டிருக்கும் சில தகவல்கள் :

Dr. Hemendra Banerjea, Head of the department of Para Psychology of Rajasthan University Says, 'The purpose of my departments extensive research in this field is not really to prove or disprove re-incarnation. It is simply to investigate and report the claims of extra cereberal memory and l ave the expert to draw couclusions. I find there is a great and genuine interest in this type of research.

For instance, we find that space research scientists have a very great interest in its experiment in Russian and American. There is genuine theory that telepathy by which extra cerebral memory is a form may be the means of space communication. The Theory is not outrageously fantastic.

ஒரு மாது கனவு காண்கிறாள். மலைமேல் தன் மகன் வேறு யாருடனோ போகிறான். அந்த அன்னியன் பெயர் என்னவென்று கேட்கிறாள். அவன் ஹென்றி இர்வின் என்கிறான். மலை உச்சியிலிருந்து கீழே விழுவதாக கனவு முடிகிறது. கனவு நிகழும் காலத்தில் பையன் மான்செஸ்டரில் சௌக்கியமாக இருந்தான். ஆனால் சில நாட்கழித்து ஸ்கார்பரோ மலையுச்சியில் போகும்போது குதிரையிலிருந்து விழுந்து இறந்து போகிறான். கனவு கண்ட மாது, பையன் இறந்தபோது கூட இருந்த மனிதனை சந்திக்கிறாள் கனவில் கண்ட மனிதன்தான் அவன் என்பதையும் கண்டு கொள்கிறாள். அவன் பெயர் பெவரிங் என்று இருந்தாலும் சங்கீதக் கச்சேரிகளுக்கு அவன் ஹென்ரி இர்வின் என்று தன்னைச் சொல்லிக்கொள்வது பழக்கம்.

(Proc. Sor. U. 322)

ஒரு மாது கனவிலே தன் மாமியாரைப் போன்ற உருவத்தைப் பார்க்கிறாள். சில மணி நேரம் கழித்து ஒரு குரல். 'நீங்கள் இருவரும் 22-ம் தேதி வாருங்கள்' என்று சொல்கிறது. சில தினங்கள் கழித்து 22-ம் தேதி மாமியார் இறந்து போகிறாள் கனவு காணும் காலத்திலேயே அவள் உடல் நலம் சுகம் இல்லாமல் இருக்கிறாள். ஆனால் கனவு கண்ட மாதிற்கு அந்த விஷயம் கனவு நிகழ்ந்த காலத்தில் தெரியாது.

(Oatc. SPRU 293)

இது ஒரு உதாரணம். ஒரு மனிதர் தன் நண்பரைக் கேட்டார் தென்மேற்குக் காற்றுக்கு லத்தீன் மொழியில் என்ன பெயர் என்றார். 'பாவோனியஸ்' என்று பதிலளித்தார் நண்பர். "இந்த டெர்பி பந்தயத்திலே, தென்மேற்குக் காற்றுக்கு லத்தீன் மொழிப் பெயரைக் கொண்ட குதிரை கெலித்ததாகக் கனவு கண்டேன். ஆனால் விழித்தவுடன் அந்தப் பெயர் மறந்துவிட்டது என்றார். அப்படிப்பட்ட பெயர் கொண்ட குதிரை நடக்கப்போகும் பந்தயத்தில் அறிவிக்கப்படவில்லை. ஆனால் பந்தயம் ஆரம்பிப்பதற்கு முன் ஜெடார் என்ற குதிரைக்கு உள்ள பெயரை 'பாவோனியஸ்' என்று மாற்றி ஓடவிட்டார்கள். அது ஜெயித்துவிட்டது.

ஒரு தரப்பட்ட கனவு நிகழ்ச்சிகளைப் போலவே இரு மனிதர்கள் ஒரே நிகழ்ச்சியை கண்டதைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு நபர் தன் அறையில் தூங்கிக்கொண்டிருக்கையில் கனவு கண்டார். தகப்பனார் இருக்கும்

இடத்திற்கு அவர் போகும்போது நேரமாகி விட்டது. கதவைத் திறந்து பார்த்தார். திறக்க முடியவில்லை. தகப்பனாரே திறந்து விட்டார். அவரைப் பார்க்காமலே மாடிமேல் தாவிப் பாய்ந்தார். திரும்பிப் பார்க்கையில் தகப்பனார் அவரையே பார்த்துக்கொண்டிருந்தார். அந்த கட்டத்தில் விழித்துக்கொண்டார். மணி இரவு பன்னிரெண்டாகிவிட்டது. நேரமாகி விட்டதென்ற பயத்துடன் வீட்டுக்கு விரைந்தோடினார். கதவு திறக்கவில்லை. தகப்பனார் திறந்துவிட்டு ஆச்சர்யத்துடன் கேட்டார். "என்ன சமாச்சாரம்? பத்து நிமிஷங்களுக்கு முன்பு வந்தாய். நேராக மாடிக்கு ஓடினாய். என்னை உறுத்துப் பார்த்துவிட்டு இறங்கினாய். பிறகு எங்கே போய் விட்டாய்?" என்றார். வந்தவர் ஆச்சர்யத்துடன் "நான் இப்பொழுதுதானே வருகிறேன். பத்து நிமிஷங்களுக்கு முன்பு இங்கே வந்ததாகக் கனவு கண்டேன்" என்றார்.

இவைகள் எப்படி நிகழ்கின்றன என்பதை உளவியல் நிபுணர்கள் ஆராய்ந்து வருகிறார்கள். ஆனால் முடிவான கருத்துக்கள் என்று ஒன்றையும் திட்டவட்டமாகச் சொல்வதற்கில்லை. ஆனாலும் கனவு சம்பந்தமாக மிகவும் நுட்பமாக ஆராய்ந்து கனவுக்கு ஆதாரம் என்ன, அது எப்படி உருவாகிறது, அது எதைக் குறிக்கிறது என்பதை எல்லாம் நன்கு அலசி சில அரிய கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார் ஃப்ராய்ட். அவர் கொள்கைப்படி மனித சுபாவத்தின் செயல்கள் எல்லாம் பால் உணர்ச்சி என்ற வித்திலிருந்து வளருவதுதான் என்ற அடிப்படையில். இருந்தாலும் அவர் பரிசீலனை முடிவு மிகவும் பாராட்டுதற்குரியது. அவர் கனவு உண்டாகுவதற்கு தாரம் என்று இவைகளைத்தான் சொல்கிறார்.

1. சமீபத்திலே ஏற்பட்ட நம் மனதிலே ஆழமாகப்பதிந்த ஒரு நிகழ்ச்சி நேரிடையாகக் கனவிலே உருப்பெறுகிறது.

2 நம் மனத்தை பாதித்த பல நிகழ்ச்சிகள் கலந்து மொத்தமான ஒரு உருக்கொண்டு கனவிலே நிகழ்கிறது.

3. கனவிலே நிகழும் முக்கிய சம்பவங்கள் வாழ்க்கையில் நம்மைக் கவராத ஒரு நிகழ்ச்சியின் மறைமுகமான தோற்றமாக இருக்கலாம்.

4 சமீபத்தில் நம்முடைய கவனத்திற்கு வராத ஒரு சிறு சம்பவம் கனவிலே அடிக்கடி வந்து நம் கவனத்தை இழுக்கலாம் என்று அவர் விளக்கி இருக்கிறார்.

தவிரவும் வாழ்க்கையிலேயே நடப்பதெல்லாம் நாம் விரும்பியபடியே, எதிர்பார்க்கிறபடியேயோ நடப்பதில்லை. பெரும்பாலும் நாம் விரும்பியதற்கு எதிரிடையாகவும் நமக்கு வேதனை தரும் வகையிலும் பல நிகழ்ச்சிகள் நடக்கின்றன. இவைகளை எல்லாம் அப்படியே மூட்டை கட்டி வைத்துவிட்டு, நாம் குறட்டைவிட்டு தூங்க முடிகிறதில்லை. நமக்கு ஏமாற்றத்தையும் வருத்தத்தையும் வேதனையையும் தந்த நிகழ்ச்சிகள் நம்முடைய அந்தகரணத்திலே நம் நினைவு நிலைக்கு அடி மட்டத்திலேயே தங்கிக் கொண்டு, என்று வெளியே வரலாம் என்று திண்டாடிக் கொண்டிருக்கின்றன. நினைவு நிலையிலிருந்து தூக்கத்திற்கு கொண்டு போகப்படுகிற எண்ண எழுச்சிகள் பின்கண்ட காரணங்களால் தொடர்ச்சியாகக் கொண்டு பேசப் படலாம்.

1. ஏதோ காரணத்தால் நிறைவேறப்படாமல் பாதியாக விடப்பட்ட மனத்தை தாக்கிய நிகழ்ச்சிகள்.

2 நம்மை எதிர்த்து நின்ற பிரச்சினையை நாம் தீர்க்க முடியாமல் கைவிடப்பட்டவை.

3. நாம் விரும்பாததால் நாமே நாம் அகநிலையில் வாங்க மறுக்கும் நிலைகள்.

4 சில உதிரி எண்ணங்கள்—இவைகளின் மேல் நாம் அதிக கவனம் செலுத்தாமல் இருந்திருக்கலாம் என்று அவர் சொல்கிறார்.

கனவுகளின் உட்பொருளை அவர் எப்படி விளக்குகிறார் என்பதற்கு அவர் தரும் ஒரு உதாரணத்தை எடுத்துக்கொள்ளலாம்.

வீடுகளும் தோட்டங்களும் உள்ள ஒரு வழியாக பி என்பவருடன் ஆஸ்பத்திரிக்குப் போகிறேன். வழியில் உள்ள இடங்களை எல்லாம் பல கனவுகளில் கண்டதாகத் தோன்றுகிறது. பி என்பவர் ஓரமாக உள்ள டீக்கடைக்கு என்னை அழைத்துச் செல்கிறார். அங்கே டோனி என்ற பெண் இருக்கிறாளா என்று கேட்கிறேன். வீட்டின் பின்பக்கத்தில் மூன்று குழந்தைகளுடன் இருப்பதாக அறிகிறேன். நான் அங்கு போகிறேன். வழியிலே புரியாத யாரோ ஒருவர் என்னுடைய இரண்டு பெண் குழந்தைகளையும் கூட்டிக் கொண்டு வருவதை பார்க்கிறேன். சிறிது நேரம் கழித்து திரும்பி வருகிறேன். அங்கே அவர்களை விட்டு வந்ததற்கு என் மனைவிமேல் ஆத்திரம் வருகிறது.

"இந்தக் கனவிலிருந்து விழித்ததும் திருப்தி ஏற்படுகிறது. இது எதைக் குறிக்கிறது? நான் ஏற்கனவே கனவிலே கண்ட இடம் என்பதைதான் ஆராயும்பொழுது எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆனால் எனக்கு

திருப்தி ஏற்பட்டதற்கு காரணம், எனக்கு குழந்தைகள் இருப்பதுதான். நானும் பி என்பவரும் ஒரே ஒரே மாதிரி வாழ்க்கையில் சென்று கொண்டிருந்தோம். ஆனால் பி என்பவர் வாழ்க்கையில் வசதிகளிலும் அந்தஸ்திலும் என்னை மிகவும் மிஞ்சிவிட்டார். நான் அவர் அடைந்த வெற்றியில் ஒரு சிறு பகுதி கூடப் படவில்லை. ஆனால் அவருக்குக் குழந்தைகள் இல்லை. எனக்குச் குழந்தைகள் உண்டு அதுவே திருப்திக்குக் காரணம் அதில் எனக்கு வெற்றி: அவருக்குத் தோல்வி. மற்ற பகுதிக்கு காரணம்?

நேற்று பத்திரிகையில் டோனி என்ற பெண் பிரசவத்தில் இறந்து போனாள் என்று பத்திரிகையில் படித்தேன். என் மனைவி சொன்னாள். என் இரு குழந்தைகளையும் வளர்த்த அதே செவிலித் தாயே அந்தப் பெண்ணையும் வளர்த்தாளாம். அந்தப் பெயர் சமீபத்தில் நான் படித்த நவீனத்திலும் வந்திருந்தபடியால் என் நினைவிலே நன்த படித்தது. இதெல்லாம் என் கனவிலே நிகழ்வதற்கு மற்றொரு காரணம் என் மூத்த பையனுடைய பிறந்த நாள் மறுநாள் காலை வருவது'தான்' என்று கனவின் உட்பொருளை விளக்கிக் காட்டுகிறார் மனோத்தத்துவ நிபுணர் ஃபிராய்ட்.

கடைசியாக இந்த மூன்று நிலைகளையும் கடைசியாக உள்ள மற்றோர் நிலையுடன எப்படிப் பிணைத்திருக்கிறார்கள நம் முன்னோர்கள் என்று பார்க்கலாம் அல்லவா? கனவு, விழிப்பு, தூக்கம் என்ற மூன்று நிலைகளையும் அறிகிறோம் கடைசியாக நான்காவது ஒரு நிலையும் இருக்கிறது என்பதை பாண்டுக்ய உபநிஷத் விளக்குகிறது. ஆத்மாவுக்கு நான்கு பாதங்கள். முதற் பாதம் வைச்வானரம் என்பது. இது புற உணர்வைக்கொண்டது. ஸ்தூலமான புறப்பொருள்களை அனுபவிப்பது இரண்டாவது 'தைஜஸ்கி' என்பது இது கனவை இருப்பிடமாகக் கொண்டது. இது உள் உணர்வைக் கொண்டது. மன உணர்வுகளை அனுபவிப்பது

மூன்றாவது பாதம் தூக்கம். தூங்குகிறவன் இச்சைப் பொருள்களின் மேல் இச்சை கொள்வதில்லை. ஒன்றையும் கனவிலே காண்பதில்லை. அந்த நிலைதான் தூக்கம். இதில் எல்லா அநுபவங்களும் ஒன்று திரண்டு உருவமற்ற நிலையில் அடங்குகின்றன. இது ஆனந்தத்தை தருவது. இதற்கு 'ப்ராக்' என்று பெயர்.

நான்காவது உள் உணர்வைக் கடந்தது. புற உணர்வையும் கடந்தது. இந்த இரண்டு நிலையையும் மீறியது. பிரக்ஞைக்கு அப்பால் நிற்பது. எல்லா பிரக்ஞைகளுக்கும் சாரமாக இருப்பது. சிவமாகவும் சாந்தமாகவும் இருப்பது இது அறியப்படவேண்டியது.

இந்த நிலைதான் முக்திநிலை.

கணநேர காவியங்கள்

கி. அ. சச்சிதானந்தம்

புல்லிதழின் மேல்நுனியில்
மணிமகுட நன்முத்தாய்
மூடுபனித் துளி
கணநேர வாழ்வில்
கடுகளவு உடலில்
கதிரோன் பேரண்டத்தை
காட்டிவிட்டு
கண் மூடிவிட்டது

கற்புக் காதல்
களிப்பில் கருவெடுத்த
கண்ணீர்துளி
கண்ணிற்கும்
விண்ணிற்கும்
வண்ணவில்லை
வளைத்துவிட்டு
வீடு சேர்ந்துவிட்டது

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

நல்ல கருத்துக்களாக-செயல்களாக-எக்காலத்திற்கும் பொருந்துவதாகத்தான் இருக்கவேண்டும். பாலில் கலந்த சுவைபோல் அது பண்பாட்டில் இழைந்து நிற்கின்றது எனலாம். சுவை ஒன்றுதான்; அன்று மிளகு சேர்த்தவர்கள் இன்று ஓவலும் ஹார்லிக்ஸும் சேர்க்கிறார்கள். சேர்க்கப்பட்டது எதுவானாலும் சுவை பாலில் கலந்திருப்பதே போல், மரபின் உயிர் இலக்கியப் படைப்புக்களிலே ஊடியிருக்கின்றனவா என்று விமர்சகன் பார்க்கிறான். அந்த உயிர், அந்த நாட்டுப் பாரம்பரியத்திலே, பண்பாட்டிலே உள்ளது, அது எக்காலத்தும் பொருந்துவதாய், யாவராலும் மேலானதென ஒத்துக்கொள்ளத்தக்கதாய் இருக்கும். இதையே விமர்சகன் தான் ஆயும் நூலும் பார்க்கின்றான்

(முடிந்தது)

பாரதியின் உரைநடையின் சிறப்புக்குணங்களை விளக்கிப்பேசினார் அவரது பேத்தி விஜய பாரதி. பேசுகையில் பாரதியின் வசன கவிதையிலிருந்து 'மண்ணிலே வேலி போடலாம்...' என்று தொடங்கும் சில வரிகளை காட்டி அவை சிறப்பாக அமைந்திருப்பதாகவும் அவரைப் பின்பற்றியவர்கள் வெற்றிபெறவில்லை என்ற கருத்தை தெரிவித்தார். பாரதியின் மேலே கண்ட வரிகள் சிறப்பானவை தான். ஆனால் அவருக்குப்பின் வசனகவிதை—புதுக்கவிதை வளர்ந்திருப்பதை கட்டுரையாளர் சரியாக மதிப்பிடத் தவறிவிட்டார். இந்த கருத்தரங்கில் நான் எழுத்து பிச்சமூர்த்தியின் 'கிளிக்கூண்டு' என் கவிதையை படித்துக்காட்டி பாரதி வழியில் இது இன்னும் சிறப்பாக வந்திருப்பதை சுட்டிக்காட்டியும் அவர் பதில் சொல்லும் போது பிச்சமூர்த்தியின் கவிதை பாரதியாரின் வசன கவிதை மாதிரி சிறப்பாக இல்லவே இல்லை என்று அடித்துச் சொல்லி விட்டார் போகட்டும். ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டிருக்கும் அவர் மீண்டும் இரண்டையும் நிதானமாக ஒப்பிட்டுப்பார்க்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். பாரதியின் மேலே குறிப்பிட்ட வரிகளைவிட கவிதை நயம், உணர்ச்சி வெளியீடு, படிமப்பிரயோகம் சிறப்பாக அதில் இருப்பதை அவர் உணர முடியும். பாரதிக்குப்பின் அன்றைய வசன கவிதை-இன்றைய புதுக்கவிதை பல மடங்கு வளம் பெற்றிருக்கிறது. கவிதை ஆராய்ச்சியாளர் இதை கவனிக்க, கணிக்கத்தவறி விட்டால் அது அவர்களுக்கு லாபமாக இருக்காது.

'தற்காலத் தமிழ் இலக்கியத்தில் புதுமைப்பித்தன் பங்கு' என்ற கட்டுரையை படித்த இ. எஸ். விஸ்வநாதன் புதுமைப்பித்தனின் தனிச்சிறப்பான அம்சங்களை குறிப்பிட்டுவிட்டு புதுமைப்பித்தனுக்கு இணையாக வேறு சிறுகதை ஆசிரியர் யாரும் இல்லை என்று குறிப்பிட்டார். புதுமைப்பித்தனுக்கு மொம்பாஸான் செல்வாக்கு பற்றியும் பிரஸ்தாபித்தார். விஸ்வநாதனைப் பேரலவே தமிழ் நாட்டில் சிறுகதைக்கு புதுமைப்பித்தன் ஒருவர்தான் என்று அடித்துச் சொல்பவர்கள் அதிகமாகி விட்டார்கள். தமிழ் மொழியை படித்து மொழி ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் கெமில் ஸ்வேலபில்கூட முப்பதுக்கள் கால மணிக்கொடி மறுமலர்ச்சி கோஷ்டியில் புதுமைப்பித்தன் most gifted and the most outstanding என்று தமிழ் இலக்கியத்தை உலகத்துக்கு அறிமுகப்படுத்தும் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார் சமுதாயயதார்த்த கோட்பாடுக்காரரும் முற்போக்கு இலக்கிய ஆதரவாளருமான கமில்ஸ்வெலபில் இப்படி சொன்னதுபற்றி ஆச்சர்யப்படுவதுக்கில்லை. அவர் கட்டுரை பற்றி பிறகு பார்ப்போம். ஆனால் விஸ்வநாதன் சொன்னது சரியான விமர்சனப்பார்வை இல்லை. கருத்தரங்கத்தில் நான் சொன்னதுபோல புதுமைப்பித்தன் மணிக்கொடி தனிச்சிறப்பு சிறுகதாசிரியர்களில் ஒருவர். வாழ்க்கைப்பார்வை அவருக்கு தனி விதமானதாக சமுதாயத்தின் மீது கசப்பும், ஆத்திரமும் மனமுறிவும் கொண்டதாக இருந்தது போலவே, ராமையாவுக்கு வாழ்க்கை பற்றி இளிவரல் (ஐரானிகல்) நோக்கும், பிச்சமூர்த்திக்கு மனிதாபிமானம் கலந்த, மரபான மதிப்புகளில் நம்பிக்கை வைத்த நோக்கும் தத்துவப் பார்வையும் கு. ப. ராஜகோபாலனுக்கு மனித வாழ்க்கையில் பெரும் பிரச்னையான ஆண்பெண் உறவு பற்றிய உளவியல் பாங்கான, உணர்ச்சி மோதல் நோக்கும் தனிச்சிறப்பாக இருந்திருக்கின்றன. மதிப்புகள் சம்பந்தமாக பார்த்தால் இவர்களுடையவை குறைந்தவை இல்லை என்று சொல்வேன். கலையம்சம் சம்பந்தமாக பார்க்கப் போனால் அதிலும் மற்றவர்கள் சாதனை குறைவானது இல்லை எனவே ஆராய்ச்சிக்காரர்கள் அசட்டு அபிமானத்தை ஒதுக்கி வைத்துவிட்டு ஒவ்வொரு எழுத்துப் போக்கிலும் இருக்கிற தனித்தன்மையை உருவம் உள்ளடக்கம் சம்பந்தமாக அவரவர் வழி சாதனையை கணித்து அவர்களுடைய இடத்தை நிதானிக்க வேண்டுமே தவிர எந்தவிதமான முறையான சத்தான பார்வையும் கொள்ளாமல் ஏதோ இரண்டு வரியில் அடித்துச் சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது

மொப்பாஸான் செல்வாக்குப்பற்றி விஸ்வநாதன் குறிப்பிட்டுச் சொன்னார். மொத்தமாக புதுமைப்பித்தன் கதைகளை படித்துவிட்டுச் சொல்கிறேன். புதுமைப்பித்தனுக்கு அது ஏற்காது. நான் கருத்தரங்கத்தில் சொல்லியது போல, 'புதுமைப்பித்தன்' சுக்ராச்சாரி' என்ற பெயரில் மலேசியா பத்திரிகை ஒன்றுக்கு அனுப்பிய ஒரு சில மொப்பாஸான் கதை தழுவல்கள் அவரது கதைத்தொகுப்பில் விளக்கம் தரப்படாமல் சேர்க்கப்பட்டிருப்பதை வைத்துத் தான் இந்த கருத்து ஏற்பட்டிருக்கிறது. இது திருத்தப்படவேண்டும். அவைகளை வைத்து புதுமைப்பித்தனை மதிப்பிடக்கூடாது.

அடுத்தபடியாக ஹயகிந்த் லியோ என்ற மலேசியாக்காரர் சரித்திர நாவல்களைப் பற்றி படிந்த கட்டுரை நூற்றாண்டு மத்தி சரித்திர நாவல்' என்பது பற்றி பேச முற்பட்ட அவர் தோற்றமும் வளர்ச்சியும் என்ற பார்வையிலோ அல்லது போக்குகள் என்ற கோணத்திலோ பார்த்திருப்பார் என்று எதிர் பார்த்தேன். ஆனால் அவர் கல்கி, சாண்டில்யன், ஜெகசிற்பியன் அகிலன் ஆகிய நால்வரை மட்டும்குறிப்பிட்டு (மற்ற பெயர்கள், மணிசேகரன், பார்த்தசாரதி, விக்ரமன், அதிலும் பார்த்திபன் கனவு, கன்னிமாடம் 'வேங்கையின் மைந்தன், ஆலவாய்அழகன் ஆகிய நான்கு நாவல்களில் பற்றி கதை சம்பந்தமான சில கருத்துக்களை மட்டும் சொல்லிவிட்டு கட்டுரையை முடித்துவிட்டரர். தலைப்புக்குத் தக்கபடி விஷயத்தை கையாளாத இந்த கட்டுரை ரொம்ப சப்பையானதாகும்.

—தொடரும்

நாடக அரங்கம்

நாடக அரங்கம் என்றபெயர்கொண்ட இந்த அமைப்பு தமிழ்நாட்டில் நாடகத்துறையில் கலைத்தரமான, இலக்கியத்தரமான நாடகங்களை தயாரித்து அளிக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. நாடகங்களை தயாரிக்கும் குழுவாகவும், அதேசமயம் நாடகத்தை ரசிகர்கள் பார்க்க வகை செய்யும் சபாவாகவும் இரண்டு அம்சங்களில் நாடகஅரங்கம் செயல்படும்.

தமிழில் சுயமாக எழுதப்படும் உயர்தர நாடகங்களுக்கு முதல் இடம் தரும். அதோடு சிறந்த பிறமொழி நாடகங்களையும் மொழிபெயர்த்தும் தழுவியும் தயாரித்து அளிக்கும்.

வருகிற ஆறுமாத காலத்துக்குள் — அதாவது ஒரு சீசனுக்கு — மூன்று நாடக நிகழ்ச்சிகள் அளிக்கப்படும்.

முதல் நிகழ்ச்சி :

பதச்சோறு (பி. எஸ். ராமையா), பில்ஹணன் (ந. பிச்சமூர்த்தி), ஸார் நிச்சயமா நாளைக்கு (புதுமைப்பித்தன்), அந்தமான் கைதி (கு. ப. ராஜ கோபாலன்) ஆகிய 4 நாடகங்கள் கொண்டது. ஒரு நீண்ட நாடகமும் மூன்று ஓரங்க நாடகங்களும்.

இரண்டாவது :

முறைமைப்பெண் (சி. சு. செல்லப்பா), தோல்வி (ந. சிதம்பரசுப்ர மண்யன்) ஆகிய ஒரு நீண்ட நாடகமும் ஒரு ஓரங்க நாடகமும்.

மூன்றாவது :

ஹல்லோ யார் அங்கே (வில்லியம் ஸரோயன்), எழுத்தாளன் (டோரியா நிகோடமி) ஆகிய 2 நீண்ட மொழிபெயர்ப்பு, தழுவல் ஓரங்க நாடகங்கள்.

இந்த மூன்று நாடக நிகழ்ச்சிகளை தயாரிக்கும் பொறுப்பை ஏற்றிருப்பவர் இலக்கியம், சினிமா, நாடகம் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கும் பி. எஸ். ராமையா.

கலை இலக்கியத்தரமான இந்த 'நாடக அரங்கம்' முயற்சி வெற்றிபெற இலக்கிய, நாடக ரசிக அன்பர்கள் இந்த முதல் சீசனுக்கு சந்தாதாராக சேர்ந்து ஆதரவு தரும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள்

சந்தா விகிதம்

முதல் வகுப்பு	ரூ.	10.00	(ஒருவருக்கு)
,,	ரூ.	15.00	(ஒரு சந்தாவில் இருவருக்கு)
இரண்டாம் வகுப்பு	ரூ.	5.00	(ஒருவருக்கு)
மூன்றும் வகுப்பு	ரூ.	3.00	,,

நாடக அரங்கம்
19-A, பிள்ளையார்கோயில்தெரு,
சென்னை-5.

சி. சு. செல்லப்பா
(ஆர்கனைஸர்)

EZHUTTHU Edited and Published by C.S. Chellappa from 19-A, Pillair Koil Street Madras-5
Printed by M. Ramanatha Rao for Central Press, 97, Big Street, Triplicane, Madras-5